GOKULAM
நவம்பர் 2008 ✧ விலை ரூ.8/- ✧ 80 பக்கங்கள்

கோகுலம்

குழந்தைகளின் குதூகலம்!



குழந்தைக் கடவுள்கள்!

புதிய படத்தொடர்

கோகுலம் சிறுவர் சங்கம்

உறுப்பினர்கள்


701


702


703


704


705


706


707


708


709


710


711


712


713


714


715


716


717


718


719


720


721


722


723


724


725


தொடர்ச்சி 3 ஆம் அட்டையில்...

கோகுலம்

கல்கி நிறுவன வெளியீடு

நவம்பர் 2008 மலர் : 26 இதழ் : 10

உயிர்களிடத்தில் அன்பு வேணும் – தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும் – பாரதியார்



நமக்குப் பெருமை!

குழந்தைகளைக் கொண்டாடிய பிரதமர் ஜவாஹர்லால் நேரு அவர்கள் பிறந்த மாதம் இது. அதனாலேயே நீங்கள் ஒவ்வொருவரும் அவரைப் பற்றி அறிந்துகொள்ள வேண்டும்.

பள்ளிக் கல்வியோடு பொது அறிவு, வலிமை, துணிவு, திறமை, ஆராய்ச்சி... என்று பலவகையான திறமைகளையும் குழந்தைகள் பெற வேண்டும். அவற்றை வளர்த்துக் கொள்ள வேண்டும். அப்படி வளர்த்துக் கொண்டால் எதிர்காலத்தில் அந்தக் குழந்தைகள் பெரியவர்களாகி, இந்தியாவை வளம் கொழிக்கும் நாடாகச் செய்வார்கள்; தலைமை ஏற்று வழிநடத்துவார்கள். அதனால் குழந்தைகளை அன்பாய் அரவணைத்து வளர்க்க வேண்டும் என்று விரும்பினார் நேருஜி. அந்த அன்பின் பெருக்காலேயே 'நேரு மாமா' என்றும் அழைக்கப்பட்டார்.



அவர் பிறந்த நவம்பர் பதினான்காம் தேதி குழந்தைகள் தினமாகக் கொண்டாடப்படுகிறது. அந்த நாளில் நம்முடைய தகுதிகளை வளர்த்துக் கொள்வது என்று உறுதிமொழி எடுத்துக் கொள்வதும், அதை முழுமையாகப் பின்பற்றி சாதனைகளைப் படைப்பதும் தான், நாம் அவருக்குச் செய்யும் பெருமை!

அன்புடன்
கோகு

கோகுலம்

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர்:
லக்ஷ்மி நடராஜன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர் : **சீதா ரவி**
உதவி ஆசிரியர் : **ஆரணி யுவராஜ்**
வடிவமைப்பு :
எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன், ச.கார்த்திகேயன்
தொலைபேசி :
044 - 4343 8888 (30 lines)
தொலைநகல் :
044 - 4343 8899
மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
gokulam@kalkiweekly.com
விளம்பரப் பிரிவு :
marketing@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com
சந்தா விவரம் :
உள்நாடு : ஒரு வருடம் : ரூ. 96/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : ரூ. 1000/-

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai-600 032.

குழந்தைகளின் குதூகலம்!



சன் ஆஃப் லைன்!

ஊரெல்லாம் ஏ.டி.எம்.
இருந்தாலும் என் கணக்கிலே
பணம் இருந்தால்தான் எடுக்க
முடியுமாமே!



கடி 'O' கடி

புதிய பகுதி

கர்ணன் யார்?

சூரியனின் குழந்தை. அதாவது சன் ஆஃப் ஸன். (son of sun)



பெரிய பேச்சாளரா இருந்தா, எந்த ஸ்டேஜ்லே வேணா பேசலாம். ஆனா கோமா ஸ்டேஜ்லே பேச முடியாது!

- அ.சீ.வினுபார்கவி,
உ. எண் : 132, ஈரோடு

என்னதான் புயல் காத்து வீசினாலும் சைக்கிளுக்கு பம்பு வைச்சுதான் காத்து அடிக்கணும்.



இப்பகுதிக்கு நீங்களும் 'கடி O கடி' என்று குறிப்பிட்டு உங்கள் படைப்பை அனுப்புங்கள்.

விடுமுறைக்காக பாட்டி வீட்டுக்கு வந்திருந்தனர் அரவிந்தும் அனிதாவும்.

அங்கே தாத்தாவின் வீட்டுக்கு முன் பகுதி பெரிய தோட்டம்!

அவர்களுக்கு உதவியாக ரவி என்கிற வேலையாள் மட்டும்தான் அங்கே இருந்தான்.

அந்த தோட்டத்தைப் பார்த்துக் கொள்வது, கடைக்குச் சென்று வருவது என்று எல்லாமே ரவிதான். அவனுக்கு தோட்டத்தின் மூலையில் தனியாக ஒரு அறை இருந்தது. அந்த அளவுக்கு தாத்தாவும் பாட்டியும் அவன்மீது பெரும் நம்பிக்கை வைத்திருந்தனர். ஆனால், அரவிந்துக்கும் அனிதாவுக்கும் அவனைப் பிடிக்கவில்லை.

தோட்டத்தில் விளையாட அவர்கள் வந்தாலே ரவி கத்தினான். ''உள்ளே போங்க. இங்கே விளையாடி தோட்டத்தை பாழாக்காதீங்க'' என்று கோபித்தான்.

ஒரு நாள்...

ஊரிலிருந்து வந்த அனிதாவின் அத்தை தான் வாங்கிய புது நெக்லஸை எடுத்து தாத்தாவுக்கும் பாட்டிக்கும் காட்டினாள். இரண்டு விரல் அகலத்தில் பட்டையாக இருந்த அந்த நெக்லஸில் வைரங்கள் பளிச்சிட்டன. அதைப் பார்த்த தாத்தாவும் பாட்டியும் மிகவும் சந்தோஷப் பட்டனர்.

''அட... ரொம்ப நல்லா இருக்கும்மா இந்த நெக்லஸ். அப்படியே கண்ணைப் பறிக்கற மாதிரி ஜொலிக்குது'' என்றாள் பாட்டி. பக்கத்து வீட்டில் இருந்தவர்களையும் அழைத்துக் காண்பித்தனர். எல்லாரும் அந்த நெக்லஸையும், அதன் அழகையும்



கே. பழனிவேல்
பதினொராம் வகுப்பு,
குட்லெட் மேல்நிலைப்பள்ளி, சோளிங்கர்.

பார்த்து பாராட்டினர்.

அனிதா எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்தான்.

''ஏன் அத்தை புது நெக்லஸ் வாங்கினது சரி. அதை ஊர் முழுக்க கூப்பிட்டுக் காட்டணுமா?''

அனிதாவின் கேள்வியைத் தொடர்ந்து பேசினான் அரவிந்த்.

''ஆம். அதோ பாருங்க. ரவிகூட ஜன்னல் வழியா உத்துப் பாக்கறான்.''

இருவரும் அடுத்தடுத்து பேசியதைக் கேட்ட அத்தை சொன்னாள்.

''நீங்க சொன்னது சரிதான். நான் பத்திரமா உள்ளே வெச்சுடுறேன்'' என்று உள்ளே வைத்துப் பூட்டினாள்.

காணாமல் போன நகை!

அடுத்த நாள் காலை...

அத்தையின் அழுகுரலோடு விடிந்தது.

''என் நெக்லஸை காணோம்.''

எப்படி காணாமல் போயிருக்க முடியும்?

நெக்லஸ் பெட்டியில் இருந்தது. பெட்டியோ பீரோவினுள் இருந்தது. பூட்டியிருந்த பீரோவைத் திறந்து, பெட்டியில் இருந்த நெக்லஸை யார் எடுத்திருக்க முடியும்?

போலீஸ் வந்தார்கள். தோட்டக்காரன் வரை விசாரித்தார்கள். அவனது ரூமை சோதித்தார்கள். எதுவும் பயனில்லை.

அத்தை அழுதுகொண்டே இருந்தாள்.

அதனால் அனிதாவும், அரவிந்தும்கூட விளையாட்டை மறந்தனர்.

''டேய்... எனக்கு என்னவோ ரவி மேலதான் சந்தேகம்'' என்றாள் அனிதா.

''ஆனா போலீஸ்தான் விசாரிச்சதே. ஒன்றுமே கிடைக்கலியே'' என்றான் அரவிந்த்.

அரவிந்தின் கேள்வி நியாயம்தான் என்றாலும் அனிதாவால் ஏற்க முடியவில்லை.

''எனக்கு சந்தேகமா இருக்கு. ரவி ரூம்ல தேடிப் பார்க்கலாமா?'' என்ற அனிதாவிடம் ''சரி'' என்றான் அரவிந்த்.

அடுத்த நாள் காலை ரவி கடைக்குச் சென்ற சமயத்தில், அவன் ரூமை அலசினர். நகை இல்லை; ஆனால் வேறொன்று கிடைத்தது. அது, அன்றிரவு சென்னை செல்வதற்கான பயணச் சீட்டு!

''என்ன அனிதா இது?''

''இரு அரவிந்த். இன்னிக்கு ரவி மெட்ராஸ் போகப் போறதா யாருமே சொல்லலியே. ரவிகிட்ட என்னவோ தப்பு இருக்கு. அவனை கண்காணிக்கணும்.''

ஒன்றுமே தெரியாத மாதிரி வீட்டுக்குள் நடமாடினர். ரவியின் வீட்டையே கவனித்துக் கொண்டிருந்தனர். அன்றிரவு...

தாத்தா பாட்டி அத்தை மூவருமே உறங்கிவிட்டனர். வாசல் விளக்கு மட்டுமே

எரிந்து கொண்டிருந்தது. ஜன்னலின் பின்னே நின்று கொண்டிருந்தனர் அனிதாவும் அரவிந்தும்.

ரவி அறையிலிருந்து வெளியே வந்தான். அவன் கையில் ஒரு பெட்டி இருந்தது. வாசலில் இருந்த ஒரு பூந்தொட்டியை எடுத்து தோளில் வைத்துக் கொண்டு நடந்தான். அவ்வளவுதான்.

''ஏய் ரவி நில்லு.''

குறுக்கே பாய்ந்தனர் அரவிந்தும் அனிதாவும்.

அதை எதிர்பாராத ரவி சற்றே மிரட்சியுடன் நின்றான். ஆனாலும் அசரவில்லை.

ரவி கடைக்குச் சென்ற சமயத்தில் அவன் ரூமை அலசினர். நகை இல்லை. ஆனால் வேறொன்று கிடைத்தது.

''வழியை விடு. எனக்கு அவசர வேலை இருக்கு ஊர்ல. நான் போய்ட்டு முதலாளிக்கு ஃபோன் பண்ணிக்கிறேன்.''

அவன் குரலில் எந்தப் பயமும் இல்லை.

''அத்தையோட நெக்லஸ் காணாம போயிருக்கு. நீ சொல்லாமப் போற..''

அனிதா முடிக்கும் முன்பாக சீறினான் ரவி.

''என்ன பேசற நீ? போலீஸ் வந்து விசாரிச்சாங்கள்ல. என்மேல தப்பில்லன்னு சொல்லிட்டாங்க. நகரு நீ. எனக்குத் தெரியும்?''

ரவியின் கோபம் அரவிந்துக்கும் கோபமூட்டியது.

''அப்படின்னா, இந்த பூந்தொட்டியை வெச்சுட்டுப் போ. இது எங்க வீட்டுது'' கத்திய அரவிந்த், அதே வேகத்தில், ரவியை நோக்கிப் பாய்ந்தான்.

அதைக் கவனித்த ரவி, வேகமாக விலகினான். பின்னால் வைத்திருந்த ரோஜா தொட்டியில் கால் இடிக்க தடுமாறி விழுந்தான். அவன் தோளில் இருந்த தொட்டி கீழே விழுந்து உடைந்தது

அதே நேரத்தில், விளக்குகள் எரிந்தன.

''என்னடா இங்க சத்தம்?''

கேட்டபடியே வந்தார் தாத்தா. பின்னாலேயே பாட்டி, அத்தை இருவரும் வந்தனர். கதவுக்கு வெளியே பக்கத்து வீட்டுக்காரர்கள் வந்தனர்.

எல்லோரின் பார்வையும் கீழே உடைந்து கிடந்த மண் தொட்டியில் பதிந்திருந்தன. அங்கே... காணாமல் போன நெக்லஸ் பளிச்சென்று தென்பட்டது.

அத்தை அந்த நெக்லஸை எடுத்து தாத்தாவின் கையில் கொடுத்தாள்.

தாத்தா அமைதியாகச் சொன்னார்.

''ரவி, நீ திருடினது நகையை இல்ல. உன் மேல நான் வெச்சிருந்த நம்பிக்கையை. அதை இனிமே உன்னாலயும் ஏற் படுத்த முடியாது. எனக்கும் ஏற்படாது. கிளம்பினபடியே போய்டு.''

தாத்தாவின் வார்த்தைகள் அடிக்காமலேயே ஏற்படுத்திய வலியை உணர்ந்து மௌனித்தனர் அனிதாவும், அரவிந்தும். ரவி தலைகுனிந்தபடியே வெளியேறினான்.

புதிய படத்தொடர்

குழந்தைக் கடவுள்கள்!

ஹாய் குட்டீஸ்...

ராமாயணம், மகாபாரதம், பாகவதம் இப்படிப்பட்ட இதிகாச, புரானங்களைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். உங்களின் தாத்தா, பாட்டி, அம்மா, அப்பா... என்று யாராவது, இவற்றில் இருந்து கதைகளை உங்களுக்குச் சொல்லி இருக்கலாம்.



கிருஷ்ணன், அனுமன், விநாயகர், முருகன்... இப்படி பல தெய்வ வடிவங்களின் சிறப்பைப் பேசும் புராணங்களில் இருந்து, ஒவ்வொரு மாதமும் ஒரு படக்கதை கோகுலத்தில் இடம்பெறப் போகிறது.

இந்த தெய்வ மூர்த்திகள், குழந்தைப் பருவத்தில் செய்த குறும்புகளையும், விளையாட்டுகளையும், இந்தப் பகுதியில் படக்கதையாக காணப் போகிறோம்.

கதைகளைவிட, அந்தக் கதைகள் சொல்லும் நீதிதான் நாம் அறிந்து கொள்ள வேண்டிய விஷயம்!

அந்த வரிசையில் முதலாவதாக கண்ணனின் லீலை இந்த இதழில் இடம் பெற்றுள்ளது.





குழந்தைக் கடவுள்கள் – 1

ஒரு கை அரிசி!

கதை : ராகுல் படம் : வேதா





நான் பழம் தரேன். நீ என்ன தருவ?
ம்...
பதில் தெரியாமல் கண்ணன் பார்த்தான்.
உன் கையால ஒரு கை அரிசி தருவியா?
ம்... தரேன்
இந்தா... பழத்தை வாங்கிட்டுப் போ...
பழங்களை வாங்கிக் கொண்டு உள்ளே போனான் கண்ணன்.


யசோதை கேட்டாள்
ஏதுடா கண்ணா இவ்ளோ பழம்?
ம்... பாட்டி குடுத்தா
பழத்தை வைத்து விட்டு...
பலகையை போட்டு...
பானையை அதன்மேல் கவிழ்த்து...
கண்ணா... மெதுவா, விழுந்துடப் போற
மூட்டையில் இருந்து அரிசியை எடுத்தான்.


வரும் வழியிலேயே அரிசி சிந்தியது.
பாட்டிக்கு தரப்போறியா.. கீழே சிந்துது பாரு.
நாலு அரிசிமணி போதுமா? நாம எடுத்துட் டுப் போவோம்...
கூடையில் அரிசி மணிகளைப் போட்டான்.
பாட்டி இந்தா!
என் செல்லம். போதுண்டா ராசா
கிழவி கண்ணனை அணைத்துக் கொண்டாள்.
பின்னால், அரிசி எடுத்து வந்த யசோதை வியந்தாள்.
அட.... கூடையில் பொன்மணிகளா? கண்ணா இதென்ன மாயம்?
கிழவியின் மடியில் அமர்ந்தபடியே கண்ணன் புன்னகைத்தான்.





வெல்டன் பூங்கொடி!

ஈரோடு மாவட்டம் நம்பியூர் காமராஜ் மேல்நிலைப்பள்ளியில் +2 படிக்கும் மாணவி **எஸ்.பூங்கொடி**. இவர் தமிழக அரசு நடத்திய தீரன் சின்னமலை நினைவு நாள் விழா பேச்சுப் போட்டியில் கலந்து கொண்டு மாவட்ட அளவில் முதல் பரிசு பெற்றார். பூங்கொடி தொடர்ந்து பல பரிசுகளை வெல்லட்டும் என வாழ்த்துவோம்!



பலே காளீஸ்வரன்!

விருதுநகர் மாவட்டம், மலைப்பட்டி அரசு மேல்நிலைப்பள்ளியில் ஒன்பதாம் வகுப்பு படிக்கும் மாணவர் **தி.காளீஸ்வரன்**. இவர் விவேகானந்த கேந்திரம் ஒன்றிய அளவில், நடத்திய ஒன்பதாம் வகுப்பு, மாணவர்களுக்கான ஓவியப் போட்டியில் முதல் பரிசு பெற்றிருக்கிறார். இவரது திறமை மேன்மேலும் வளர வாழ்த்துவோம்!



பெரிய நகரம் முதல் குக்கிராமம் வரையிலுள்ள இளம் சாதனையாளர்களை வெளிச்சமிட்டுக் காட்டும் பகுதியிது! விளையாட்டு, பேச்சு, ஓவியம் என எதுவாக இருந்தாலும் சரி, அவற்றில் மாவட்ட அளவிலோ, மாநில அளவிலோ கலந்துகொண்டு பரிசு பெற்றிருந்தால் அது குறித்த விவரங்கள், புகைப்படம், சான்றிதழின் நகல் ஆகியவற்றை அனுப்புங்கள். சிறந்தவை வெளியாகும். கோகுலம் சார்பாகவும் அவர்களுக்குப் பாராட்டுச் சான்றிதழ் மற்றும் பரிசு அளிக்கப்படும்.

மறக்காமல் பள்ளி, வீட்டு முகவரியைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். முக்கியமான நிபந்தனை

சபாஷ் ஜெய்பிரியா!



விருத்தாசலம் சக்தி மெட்ரிகுலேஷன் பள்ளியில் முதல் வகுப்பு பயிலும் மாணவி **கி.ஜெய்பிரியா**, பல்வேறு போட்டிகளில் கலந்து கொண்டு பல பரிசுகளைப் பெற்றுள்ள ஜெய்பிரியாவுக்கு, சமீபத்தில் தமிழ்நாடு வாசகர் பேரவை சார்பில் விருது வழங்கப்பட்டது. ஜெய்பிரியா மேலும் பல பரிசுகளையும் விருதுகளையும் பெற வாழ்த்தி கரவொலி எழுப்புவோம்.



OSHO COMMUNICATIONS Pvt. Ltd.

DRAW KIDS 2006

PARTICIPATION CERTIFICATE

had taken part in the DRAW KIDS 2006 Inter District Competition held in Tamilnadu & Pondicherry.

PRINCIPAL / HEADMISTRESS

OSHO COMMUNICATIONS Pvt. Ltd.

சூப்பர் தியாதர்ஷனா!



தஞ்சாவூர் மாவட்டம், ஜாக் & ஜில் மெட்ரிக் பள்ளியில் ப்ரி-கே.ஜி. மாணவி **அ.தியாதர்ஷனா** கடந்த ஆண்டு தமிழ்நாடு, பாண்டிச்சேரி மாநிலங்களுக் கிடையே ஓஷோ கம்யூனி கேஷன்ஸ் நடத்திய Draw kids போட்டியில் கலந்துகொண்டு முதல் இடம் பிடித்து பரி சினை பெற்றுள்ளார். அவரது சாதனை தொடர கரவொலி எழுப்புவோம்!

அந்தச் சாதனை, கடந்த ஓராண்டுக்குள் நிகழ்த்தப் பட்டதாக இருக்க வேண்டும். பழையது வேண்டாம்!




அனுப்ப வேண்டிய முகவரி :

கோகுலம்,
சாதனைத் தளிர்கள்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 600 032.

நோபல் வின்னர்ஸ்

உலகளவில் பல துறைகளிலும் மிகச் சிறந்த கண்டுபிடிப்புகள் மற்றும் சாதனைகளைப் படைக்கும் சாதனை யாளர்களுக்கு வழங்கப்படும் மிக உயர்ந்த பரிசு நோபல் என்பது உங் களுக்கு நன்றாக தெரியுமல்லவா? 2008ஆம் ஆண்டுக்கான நோபல் பரிசு பெறுபவர்களை இங்கே அறிந்து கொள்வோம்.



அமைதி

பின்லாந்தின் முன்னாள் ஜனாதி பதி மார்ட்டி அத்திசாரிக்கு இந்த ஆண்டுக்கான நோபல் அமைதிப் பரிசு வழங்கப்படுகிறது. இவர் கடந்த முப்பது ஆண்டுகளுக்கும் மேலாகப் பல்வேறு கண்டங்களில் சர்வதேசப் பிரச்னைகளைத் தீர்ப்பதற்குப் பாடு பட்டவர். 2005 ஆம் ஆண்டு இந் தோனேசிய அரசுக்கும் ஏக் இயக் கத்துக்கும் சுமூக முடிவு கொண்டு வந்த சாதனை இவரையே சேரும். முப்பது ஆண்டுகளாக நடந்த இந்த மோதலில் பதினைந்தாயிரம் பேர் கொல்லப்பட்டனர். கொசாவோ சுதந்திரப் பாதையை நோக்கிச் செல்லவும் இவர் உதவினார்.



* சினோசி




* டேக்னியர்

மருத்துவம்

மருத்துவத் துறைக்கான நோபல் பரிசை ஜெர்மனி நாட்டைச் சேர்ந்த ஹரால்டு சர்ஹாசன் மற்றும் பிரான்சு நாட்டைச் சேர்ந்த பெண் விஞ்ஞானி பிரான்சுவா பாரே - சினோசி மற்றும் லுக் மான் டேக்னியர் ஆகியோர் பகிர்ந்து கொள்கின்றனர். ஹரால்டு சர்ஹாசன் பெண்களுக்கு ஏற்படும் கர்ப்பப்பைப் புற்றுநோயை ஏற்படுத் தும் பாபிலோமா வைரஸ் குறித்துக்

பாபிலோமா



வேதியியல் துறைக்கான நோபல் பரிசு ஜப் பானில் பிறந்த ஒசாமு ஷிமோ முரா, அமெரிக்கர் களான மார்டின் ஷால்பி, ரோஜர் சியன் ஆகியோ ருக்கு வழங்கப்படுகிறது. ஜெல்லி மீன் புரதம் தொடர்பான ஆய்வுக்காக இந்தப் பரிசு இவர்களுக்கு வழங்கப் படுகிறது. ஜெல்லி மீன் புரதம்

வேதியியல்

கண்டறிந்து உலகிற்குத் தெரிவித்தார். இதற்காக இவருக்கு நோபல் பரிசுத் தொகையில் 50 சதவிகிதம் கிடைத்தது. எய்ட்ஸ் நோயை உண்டாக்கும் வைரஸ்கள் குறித்த ஆய்வுக்காக பெண் விஞ்ஞானி பிரான்சுவா பாரே - சினோசி மற்றும் லுக்மான் டேக்னியருக்கு 50 சதவிகிதப் பரிசுத் தொகை பகிர்ந்தளிக்கப் படுகிறது.




★ ஹர்ஹாசன்

நோபல்

மூளை செல்கள் வளர்ச்சி, கட்டிகள் ஏற்படுவது, புற்றுநோய் செல்களின் பெருக்கம் போன்றவற்றைக் கண்டறியப் பயன்படுகிறது.

★ மார்டின் ஷால்பி



அணு இயற்பியல் தொடர்பான கண்டுபிடிப்புகளுக்காக அமெரிக்காவின் யாசிரோ நாம்பு, ஜப்பானியர்

இயற்பியல்

களான கோபயாஷி, மஸ்காவா ஆகியோருக்கு இயற்பியல் துறைக்கான நோபல் பரிசு வழங்கப் படுகிறது.



யாசிரோ நாம்பு ஜப்பானில் 1921 இல் பிறந்தார். ஜப்பானிய வம்சாவளி இயற்பியல் விஞ்ஞானியான இவர் உல்ப் பரிசு, திராக் பதக்கம் எனப் பல்வேறு பரிசுகளைப் பெற்றுள்ளார். கோபயாஷி ஜப்பானில் உள்ள நகோயா பகுதியில் 1944ஆம் ஆண்டு பிறந்தார். ஜப்பான் அகாதமி பரிசு, அசாகி பரிசு எனப் பல்வேறு பரிசுகளை வென்றுள்ளார். மஸ்காவா 1946 ஆண்டு ஜப்பானின் ஆஷி மாவட்டத்தில் பிறந்தவர். நகோயா பல்கலைக் கழகத்தில் பிஎச்டி படித்தவர்.

இலக்கியம்



2008 ஆம் ஆண்டு இலக்கியத்துக்கான நோபல் பரிசு பிரெஞ்ச் எழுத்தாளர் ஜீன் -மரியே கஸ்டவ்

லே கிளிசியோவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

லே கிளசியோ 68 வயது நிரம்பியவர். தன்னுடைய வாழ்நாளில் 45 ஆண்டுகளாகத் தொடர்ந்து எழுதிக்கொண்டு வருகிறார். இதுவரை சுமார் 50 படைப்புகளைக் கொண்டு வந்துள்ளார். பனாமாவில் நான்காண்டுகள் வசித்தபோது, அங்கே இந்தியப் பழங்குடியினர் படுகின்ற துயரங்கள் இவர் எழுத்தையும் எண்ணத்தையும் பாதித்தாகக் கூறுகின்றார். 1980 இல் 'டிசெர்ட்' என்ற நாவலை எழுதி சிறந்த நாவலாசிரியராக இடம் பெற்றார்.

தொகுப்பு :
முனைவர் ஆசுரா

2008ஆம் ஆண்டு பொருளாதாரத்துக்கான நோபல் பரிசு அமெரிக்காவின் பால் ராபின்குருக்மேன் அவர்களுக்கு கிடைத்துள்ளது. இவர் பிரின்ஸ்டன் பல்கலைக் கழகத்தில் பொருளாதாரத் துறையில் பேராசிரியராகப் பணியாற்றி வருகின்றார். 1953 ஆம் ஆண்டில் பிறந்த இவர் யேல் பல்கலைக் கழகத்தில் பொருளாதாரத் துறையில் பி.எஸ்.பட்டமும், 1977ஆம் ஆண்டு எம்.ஐ.டி.யில் பி.எச்.டி.யும் பெற்றவர். சர்வதேச அளவில் இயங்கும் முப்பதுக்கும் மேற்பட்ட பொருளாதாரம் சார்ந்த குழுக்கள் மற்றும் நாடுகளுக்கு இடையிலான நல்லுறவுக் குழுவில் இடம் பெற்றவர். சர்வதேச வியாபாரக் கொள்கை, புதிய வியாபாரக் கொள்கை போன்றவற்றில் சிறப்பான பங்களிப்பை வழங்கியுள்ளார்.



பொருளாதாரம்



தேடி வரும் கோகுலம்; படிக்கப் படிக்க குதூகலம்!

பெயர் : ....

முகவரி : ....

....

....


ஒரு வருட சந்தா ரூ. 96/-. இதை டிமாண்ட் டிராஃப்ட் அல்லது மணியார்டராக அனுப்புங்கள். இந்தத் தொகை 'Gokulam Tamil' என்ற பெயருக்கு இருக்க வேண்டும். உள்ளூர் காசோலைகள் மட்டுமே ஏற்கப்படும்.

அனுப்ப வேண்டிய முகவரி :


சர்க்குலேஷன் மானேஜர், கோகுலம் (தமிழ்), கல்கி பில்டிங்ஸ்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 032

யாருக்கு வீடு?

கதை : ஆ. செல்வி
ஏழாம் வகுப்பு,
பாரத் மாண்டிசோரி மெ.மே. பள்ளி, இலஞ்சி.
படம் : ராம்கி




மறுநாள்...
என்ன ராமா வீடு கட்டு கிறாயாமே?
ஆம் மன்னா!
இந்த வீட்டை தானம் கொடுத்துவிடு. வேறு வீடு ஒன்றை கட்டிக் கொள்!
தங்கள் விருப்பப்படியே ஆகட்டும் மன்னா.
அதிர்ச்சியை மறைத்துக்கொண்டான் ராமன்.
யோசனையுடன் நடந்தான்.
என்ன செய்வது? மன்னரை மீறி எதுவும் செய்ய முடியாது.
மீறினால் உயிர் போய் விடும். கழுத்தைச் சீவி விடுவார்.
எதுவுமே தோன்றவில்லை அவனுக்கு.
வீட்டில் ராமனின் மனைவி...
என்ன கவலையாக இருக்கிறீர்கள்? மன்னர் எதுவும் சொன்னாரா?
கட்டும் வீட்டை தானம் கொடுக்கச் சொல்கிறார் மன்னர்.
இதென்ன பைத்தியக்காரத் தனம்?
மன்னரின் ஆணையை மீறக் கூடாது.



அதற்காக... கட்டிய வீட்டைக் கொடுப்பீர்களா?
உஷ்... பேசாமலிரு. நான் பார்த்துக் கொள்கிறேன்.
அன்று இரவு...
ஆம்... இப்படிச் செய்யலாம்.. இதுதான் சரியான யோசனை?
வீடு கட்டி முடிந்தது. தெனாலிராமன் ஒரு போர்டு வைத்தான். அதில்...
இலவசம்!
போதும் என்று நினைப்பவருக்கு இந்த வீடு இலவசம்!
எல்லோரும் ஆசையோடு சென்று பார்த்தார்கள்.
என்னது..? ஆசை இல்லாதவருக்கா?
ஒரு நாள்...
ஐயா நான் ரொம்ப ஏழை. இந்த வீட்டை எனக்கு கொடுங்க.
ஏன்?
எனக்கு 'போதும்' என்ற மனமிருக்கு.
அப்படின்னா இந்த வீட்டை ஏன் விரும்புற?
கேட்டவன் தெறித்து ஓடினான்.


மன்னன் ராமனை அழைத்து...
வந்ததே ஒருவன்தான். அவனையும் ஏமாத்திட்ட.
இல்லை மன்னா, தெரிந்து கொண்டேன்.
என்ன தெரிந்து கொண்டாய்? ஏமாற்றுவதற்கா?
இல்லை. போதுமென்ற மனம் எவருக்கும் இல்லை.
அப்படியானால் அந்த வீட்டை என்ன செய்யப் போகிறாய்?
மன்னா. மதிப்புக்குரிய தங்கள் தலைமையில்...
என் தலைமையிலா? என்ன செய்யப் போகிறாய்.
புதுமனை புகுவிழா நடத்தி...
நீ குடிபுகப் போகிறாய்.
ஆம் மன்னா. அந்த வீடு போதும் என்கிற மனம் எனக்கு இருக்கிறது.
கிருஷ்ணதேவராயர் வாய்விட்டுச் சிரித்தார்.
கெட்டிக்காரா... இதிலும் ஜெயித்துவிட்டாய்.

கோலாட்டம்!



"இன்னிக்கி நம்ம கோபாலு மகளுக்குத் திருமணம். போயிட்டு வரலாமா?" என்று கேட்டார் சித்தப்பா. கேட்டுக் கொண்டே வீட்டுக்குள் நுழைந்த தமிழ்ச் செல்வி "போகலாமே. எங்க வீட்டிலேயும் கூப்பிட்டு இருக்காங்க. அம்மாவும்கூட வருவாங்க. என்ன ரஞ்சன், நீயும் வருவ இல்லே?" என்று கேட்டாள்.

ரஞ்சன் மௌனமாக இருந்தான். அதன் அர்த்தம் சித்தப்பாவுக்குப் புரிந்தது. "அழைக்காத விசேஷத்துக்கு எப்படி போவதுன்னு யோசிக்கிறியா? என்னைக் கூப்பிடும்போதே உன்னையும் கட்டாயம் அழைச்சிக்கிட்டு வரச்சொல்லி இருக்காரு கோபாலு. வாடா போகலாம். உனக்கும் ஒரு கிராமத்துக் கல்யாணத்தை பார்த்த மாதிரி இருக்கும்" என்றார்.

அதற்கு மேல் ரஞ்சனுக்கு எந்த மறுப்பும் இல்லை.

மாப்பிள்ளை அழைப்பு சிரிப்பும் சந்தோஷமுமாக நடைபெற்று முடிந்திருந்தது. விருந்துக்கு இன்னும் அரைமணி நேரம் ஆகும் என்றார்கள். நடுவே நிறைய இடம் விட்டு அதைச் சுற்றி எல்லோரும் வட்டவடிவில் உட்கார்ந்து கொண்டார்கள்.

புரியாமல் பார்த்த ரஞ்சனிடம் "இப்போ இங்கே கோலாட்டம் ஆடப்போறாங்க" என்று விளக்கினார்.

சற்று நேரத்தில் எட்டு பெண்கள் வந்தார்கள். எல்லோரும் உறவுக்காரப் பெண்களாக இருக்க வேண்டும். ஒருவரிடம் மற்றொருவர் எதையோ கேட்டுக் கொண்டிருந்தார்கள். சுற்றிலும் உட்கார்ந்திருந்தவர்கள் "கோமதி, இன்னிக்கு ஆட்டத்திலே நீதான் வெளுத்து கட்டணும்", "பத்மாக்கா, நீங்கதான் நம்பர் ஒன்னா ஆடணும்" என்றெல்லாம் கூறி உற்சாகப்படுத்தினார்கள்.

ஆட வந்திருந்த ஒவ்வொருவரிடமும் ஒரு அடி நீளமுள்ள கோல் இருந்தது. கைக்கு ஒரு கோல் என்று இரண்டு கோல்கள். ஆட்டம் தொடங்கியது. வட்டமாக

அழகாக நகர்ந்தனர் ஆட்டக்காரர்கள். குனிந்தும் நிமிர்ந்துமாக முதுகை வளைத்த படியே கோல்களை ஒன்றோடொன்று தட்டினார்கள்.

எல்லோரும் சொல்லி வைத்ததுபோல் ஒரே சமயத்தில் கோல்களைத் தட்டி ஒலி எழுப்பியது ரஞ்சனுக்கு வியப்பாக இருந்தது.

ஆட்டம் வேகமெடுத்தது. மிகவும் வேகமாக ஆட்டக்காரர்கள் அங்குமிங்கும் கோல்களை ஒலித்தபடியே நகர்ந்து கொண்டிருந்தனர்.

''இவ்வளவு வேகமாக கோல்களை அசைக்கிறாங்களே பக்கத்திலே இருக்கிற வங்க முகத்திலே பட்டுடுச்சுன்னா?'' என்று சித்தப்பாவிடம் தன் கவலையை மெதுவாக வெளிப்படுத்தினான் ரஞ்சன். சித்தப்பா சிரித்தார். ''அதெல்லாம் ஆகாது. பல வருஷமா இப்படி ஆடிக்கிட்டு இருக்காங்களே. நீ சொன்ன மாதிரி ஒரு தடவைகூட ஆனதில்லே'' என்ற சித்தப்பா, கோலாட்டம் தொடர்பான ஒரு சுவாரஸ்யமான கதையை கூற ஆரம்பித்தார்.

ஒரு காலத்தில் பஸவாசுரன் என்ற அரக்கன் இருந்தான். நல்லவர்களுக் கெல்லாம் கெடுதல் செய்தான். ஒரு சமயம் சில சிறுமிகள் அந்த அசுரன் எதிரில் அழகாக கோலாட்டம் ஆடினார்கள். அதனால் மகிழ்ந்த அசுரன் ''உங்களுக்கு என்ன வேண்டும்? எது கேட்டாலும் தருகிறேன்'' என்றானாம். உடனே அந்தச் சிறுமிகள் ''நீங்கள் நல்லவர்களை





* கோலாட்டத்தை 'ஹல்லிசகா' என்று சமஸ்கிருதத்தில் குறிப்பிடுகிறார்கள். கோல்களி, கோலாடி என்றெல்லாம் நாட்டின் பிற பகுதிகளில் கோலாட்டம் அழைக்கப்படுகிறது. 'தாண்டரசம்' என்றும் இதை குஜராத்தில் அழைக்கிறார்கள். அங்கு மாறி மாறி வரும் தாளங்களுக்கேற்ப கோல்களை அடித்தபடியே பிரார்த்தனை செய்வார்கள்.

* பொதுவாக பெண்கள் ஆடும் ஆட்டம் இது. என்றாலும் சில இடங்களில் ஆண்களும் ஆடுகிறார்கள். சீறிப்பாய்ந்தபடி ஆண்கள் கோலாட்டம் ஆடுவதும் ஒரு தனி அழகுதான்.

* கோலாட்டம் மிகமிகப் பழமையான கிராமிய நடனக்கலை. இது எங்கே முதலில் தொடங்கியது என்றால் மகாபலிபுரம், ஹம்பி, ராமப்பா என்று விதவிதமான விடைகள் கிடைக்கின்றன.

* 'பின்னல் கோலாட்டம்' என்பதில் ஆடும் பெண்களின் ஒரு கையில் கயிற்றின் நுனி ஒன்று இருக்கும். அதன் மறுமுனை ஓர் உயரமான கம்பத்தில் கட்டப்பட்டிருக்கும். தாளத்தோடு ஆடியபடியே பெண்கள் ஒருவரை விட்டு ஒருவர் மாறிமாறி நகரும்போது கயிறுகளில் அழகழகான டிசைன்கள் உண்டாகும். வண்ணக் கயிறுகள் என்பதால் இது மேலும் அழகாகத் தெரியும். பிறகு அந்த டிசைன்களை அவர்கள் மெல்லக் கலைத்து கயிறுகளை அவற்றின் ஆரம்ப நிலைக்குக் கொண்டு வருவதும் ஒரு தனி அழகுதான்.

கொடுமைப்படுத்தக் கூடாது' என்று கேட்டுக்கொள்ள அந்த அசுரனும் சம்மதித்து அதன்படியே நடந்துகொண்டான்.

இந்த நாளை நினைவுபடுத்தும் வகையில், அக்டோபர் - நவம்பர் மாதத்தில் வரும் அமாவாசையில் இருந்து பவுர்ணமி வரை, தினமும் சிவன் கோவிலில் பெண்கள் கோலாட்டம் ஆடுவது வழக்கம். அப்போது களிமண்ணால் நந்தி தேவதை (எருது) சிலை செய்து அதற்கு சின்னக் கோப்பையில் குடிக்க தண்ணீரும் வைப்பார்கள். பவுர்ணமி அன்று களிமண் நந்தி தேவதையை பல்லக்கில் சுமந்து சென்று நதியில் கரைப்பார்கள். அப்போது ஒவ்வொரு பெண்ணின் கையிலும் ஒரு கோல் இருக்கும். ஒருவரின் கோலை மற்றொருவரின் கோலுடன் தட்டியபடியே ஆடிக்கொண்டு ஊர்வலம் போவார்கள்.

காதுகள் இதையெல்லாம் கேட்டுக்கொண்டு இருக்க, ரஞ்சனின் கண்கள் எதிரில் நடந்த அற்புதமான கோலாட்ட நடனத்தை ரசித்துக் கொண்டிருந்தன. அவன் கைகள் அந்த இசைக்கேற்ப தாளம் போட்டன. அவன் முகத்தில் மகிழ்ச்சி நன்றாகவே தெரிந்தது. ●



கோகுலம்

எக்ஸ்பிரஸ்

உள்ளே...





ஆர்.ஸ்வர்ண லட்சுமி,

ஏழாம் வகுப்பு,
ரோசரி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி,
சென்னை



ப.ஜெயக்குமார்,
பதினொராம் வகுப்பு,
காமராஜ் மே.நி.பள்ளி, நம்பியூர்


த.வேல்முருகன்,
காமராஜ் மே.நி. பள்ளி, நம்பியூர்



உங்கள் கைவண்ணம்!

ரா.இளவரசி,

பன்னிரண்டாம் வகுப்பு,
பெரியார் மணியம்மை பெண்கள்
மேல்நிலைப் பள்ளி, திருச்சி





ஏ.சுரேஷ்குமார்,

உறுப்பினர் எண் : 266,
பத்தாம் வகுப்பு, காமராஜ்
மேல்நிலைப் பள்ளி, நம்பியூர்







மகிழ்வோடு வாழ்ந்திடு!

ஆறறிவு படைத்த நாமும்
அஃறிணை யைப் பார்த்து
அறிந்து கொள்ள உண்மைகள்
ஆயிரந் தான் இருக்கு.

எறும்பைப் போல என்றும்நீ
சுறுசுறுப்பாய் இருந்திடு!
காக்கை போல ஒன்றுகூடி
கனிந்த வாழ்வு வாழ்ந்திடு!

அரும்பைப் போல மனமலர்ந்து
அன்பு கொள்ள விழைந்திடு!
கொக்கைப்போல காலம் அறிந்து
காரியங்கள் ஆற்றிடு!

நாயைப் போல நாளும் நாளும்
நன்றியுடன் நடந்திடு!
மானைப்போல துள்ளித் திரிந்து
மகிழ்வோடு வாழ்ந்திடு!

சோனா மணிமொழி

பட்டம் பறக்குது வானிலே
பார்த்து மகிழ வாருங்கள்
கந்தன் விட்ட பட்டமே
காண ஜோராய் இருக்குதாம்!

கரந்து கரந்து நூலினை
கந்த னுமே விடுகிறான்
பறந்து மேலே போகுதாம்
பருந்தை தாண்டி உயரமாய்!

காற்றில் ஆடும் பட்டத்தை
காணக் காண இன்பமாம்
போற்றி புகழ வாருங்க
போகும் விதத்தை பாருங்க!



பட்டம்

கு. காளிமுத்து



நெல்லை கவிதாசன்

இயற்கையைக் காப்போம்!



காணக் காண இன்பம் - அந்தக்
கடவுள் கொடுத்த இயற்கை
பேணிக் காக்க வேண்டும் - இது
பாப்பா நமது கடமை

பாடுகின்ற குயிலும் - பாய்ந்து
ஓடுகின்ற நதியும்
ஆடுகின்ற மயிலும் - அலை
மோதுகின்ற கடலும்
(காணக் காண...)

அழியும் காட்டின் வளமும் - பல
ஆலை கக்கும் புகையும்
குவியும் குப்பை மலையும் - உயிர்
குடிக்கத் தானே செய்யும்

அன்னம் என்னும் பறவை - உலகில்
அன்று இருந்ததாமே
இன்று இல்லை ஏனோ? - இது
இயற்கைக் கேடு தானோ!

நாளை வாழ்க்கை வேண்டும் - என்ற
நல்ல எண்ணம் இருந்தால்
வேளை இதுதான் பாப்பா - இன்றே
விழித்துக் கொள்வாய் பாப்பா!



போலார் கரடி

வலிமை மிகுந்த போலார் கரடி 1320 பவுண்டு எடை இருக்கும். இது வளர்ந்த மனிதனைவிட 10 மடங்கு அதிகம். மண்ணில் காணப்படும் மிகப் பெரிய மாமிசம் தின்னும் பாலூட்டி இனம் இதுதான்.

வேட்டையாடும்போது போலார் கரடிகள் தங்கள் உள்ளங்கையால் மூக்கை மூடிக் கொள்ளும். இவற்றின் உடம்பு வெள்ளையாய் இருந்தாலும் மூக்கு கருப்பாய் இருப்பதால் அதை மூடிக் கொண்டு தான் இருப்பது தெரியாமல் அவை மிருகங்களை வேட்டையாடும்.

புதிதாய்ப் பிறக்கும் போலார் கரடிகள்

அலெக்ஸாண்டர்

- இவர் கிரேக்க அரசர் பிலிப்பின் மகன்
- இந்தியா மீது படையெடுத்த முதல் ஐரோப்பியர்
- இவரது குதிரையின் பெயர் 'பியூசிபேலஸ்'
- இந்தியாவிலிருந்து கிரீஸ் செல்கையில் அலெக்ஸாண்டிரியாவில் மலேரியாவால் இறந்தார்.
- கல்லறை வாசகம் : உலகம் போதாது என்று சொன்னவனுக்கு ஆறடி நிலம் போதுமான தாய் உள்ளது

- வி.கே. ஹரிபிரசாத், ஒன்பதாம் வகுப்பு, செயின்ட் பால்ஸ் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, நெய்வேலி



சிறிய வயதில் பெரிய



- 19 வயதில் 1642ஆம் ஆண்டு, கணக்கில் கூட்டல் முறையை விரைவாகச் செய்வதற்குப் 'பாஸ்கல்' ஒரு கருவியைக் கண்டுபிடித்தார்.
- 20 வயதில் 'பிரெய்ல்' என்பவர், கண் தெரியாதவர்கள் படிப்பதற்காக உபயோகத்திலுள்ள பிரெய்ல் முறையைக் கண்டுபிடித்தார்.
- 21 வயதில், 'மார்க்கோனி' கம்பியில்லாத தந்தியைக் கண்டுபிடித்தார்.
- 23 வயதில், 1584ஆம் ஆண்டு ஃபிளஷ் கழிப்பறையை

சிறியதாய் இருக்கும். தாய்ப் பால் மிக செழுமையாகவும் கொழுப்புச் சத்து கொண்டதாகவும் இருப்பதால் தாய்ப்பால் குடிப்பதால் குட்டிகள் மிக விரைவில் குண்டாக ஆகி விடுகின்றன.

போலார் கரடிகளின் கல்லீரலில் ஏராளமான வைட்டமின் 'ஏ' சத்து இருக்கிறது. குறைந்த அளவில் இவை மனித உடலுக்கு நல்லது என்றாலும் அதிகமாக இதன் கல்லீரலை மனிதர்கள் சாப்பிட்டால் அவை விஷமாகிவிடும்.

- எஸ்.சுப்ரியா,
உறுப்பினர் எண் : 79, சென்னை

'ஹாரிங்டன்' கண்டுபிடித்தார்.

✸ 24 வயதில், 1837ஆம் ஆண்டு 'பிட்மான்' என்பவர் சுருக்கெழுத்து முறையைக் கண்டுபிடித்தார்.

✸ 26 வயதில், 1792ஆம் ஆண்டு நெப்போலியனுக்கு டாக்டராக இருந்த 'லாரி டாமினிக் ஜின்' ஆம்புலன்ஸை உருவாக்கினார்.

சாதனை!

✸ 28 வயதில், வாயு நிரப்பப்பட்ட தெர்மா மீட்டரைக் 'கலிலியோ' கண்டுபிடித்தார்.

- பி.முகுந்தன்,
ஐந்தாம் வகுப்பு,
(சீதா தேவி கரோடியா பள்ளி,
சென்னை - 59



நோபல்

டாக்டர் ஆல்ஃபிரட் நோபல் ஸ்வீடன் நாட்டு வேதியியல் அறிஞர். அவர் தொழில் அதிபராகவும் விளங்கினார். அவர் செய்த ஆராய்ச்சியின் பலனாக 'டைனமைட்' எனும் வேதிப் பொருளை கண்டுபிடித்தார். அதை அறிந்து கொண்ட சில பேர் போர்களில் அதைப் பயன்படுத்தினார்கள். அதனால் பல பேர் இறந்தனர். தம் கண்டுபிடிப்பு இப்படி அழிவுக்கு பயன்படுகிறதே என நோபல் மன வேதனை அடைந்தார். அவர் 1896ல் இறக்கும் தருவாயில் தமது சொத்தில் மிகப் பெரிய தொகையை, மனித குலத்துக்கு நன்மை தரும் புதிய விஷயங்களை யார் கண்டுபிடிக்கிறார்களோ, அவர்களுக்கு எழுதி



வைத்தார். அவர் எழுதி வைத்த தொகையை பகிர்ந்து இன்று நோபல் பரிசு வழங்கப்படுகிறது. இந்த நோபல் பரிசு இயற்பியல், வேதியியல், மருத்துவம், இலக்கியம், அமைதி ஆகிய துறைகளில் சாதனை புரிந்தவர்களுக்கு வழங்கப்படுகிறது. இந்தியாவில் நோபல் பரிசு பெற்றவர்கள் ரவீந்திரநாத் தாகூர் (இலக்கியம்), சி.வி.ராமன் (இயற்பியல்) மதர் தெரசா (அமைதி), ஜகதீஸ் சந்திரபோஸ் (தாவரவியல்), அமர்த்தியாசென் (பொருளாதாரம்) ஆகியோர்.

- மு.சாய்பிரபு, உறுப்பினர் எண் : 244,
பொன்னையா ராமஜெயம் பொதுப் பள்ளி, தஞ்சாவூர்

அப்பா : டேய், கணக்கு வீட்டுப் பாடம் போடறியா? நான் வேணும்னா உதவி செய்யட்டுமா?

மகன் : வேணாம்ப்பா! நானே தப்பா போட்டுக்கறேன்.

- ப.கோபிபச்சமுத்து, கிருஷ்ணகிரி



"டீச்சர் கேட்ட கேள்விக்கு நான் மட்டும் தான் பதில் சொன்னேன். அதான் சீக்கிரமா ஸ்கூல்லயிருந்து வந்துட்டேன்."

"என் செல்லம், என்ன கேள்வி கேட்டாங்க?"

"அவங்க மேல ராக் கெட்விட்டது யாருனு கேட் டாங்க!"

- சு.அபிராமி, காயக்காடு



"உங்க கிளாஸ் டீச்சர் பேரு என்னடா?"

"செங்'குட்டு'வன்."

"உன்னோட தலையில அங்கங்கே வீங்கி இருக்கும்போதே நினைச்சேன்!"

- ஒய்.ரவிராகுல், ஈரோடு



"நேத்து ராத்திரி உங்க வீட்டுல லைட் எரிஞ்சுதே! என்ன செஞ்சீங்க?"

"சுவிட்சை போட்டேன்."

- பா.உமா, காரையூர்



திரவத்தின் பெயர்?



ச. ஆதிகேசவன், கோவில்பட்டி.

வித்தியாசங்களைக் கண்டுபிடி!

இரண்டு படங்களுக்கிடையே உள்ள ஐந்து வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள்!






விடை 56-ம் பக்கம்

I. குறிப்புகளைக் கொண்டு இந்த புதிர் கோபுரத்தைப் பூர்த்தி செய்யுங்கள்.

1. ஒரு தமிழ் மாதம்
2. ஒரு மலரின் பெயர்
3. நீரிலும் நிலத்திலும் வாழும்
4. முகம் பார்க்க உதவும்
5. விழுதுகளைக் கொண்டது
6. பார்க்க கேட்க உதவும்



II. குறுக்கெழுத்துப் புதிர் :

கீழ்க்கண்ட புதிருக்கான விடைகள் அனைத்தும் விலங்குகள் ஆகும்.

கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்.

இடமிருந்து வலம் :

1. பிள்ளையாரின் வாகனம்

4. இதன் உடலில் புள்ளி உள்ளதால் கோலம் போடலாம்.


10. பெயரிலேயே வரியை வைத்துள்ளது.

16. இராமரின் ஆசியால் முதுகில் மூன்று கோடுகள் உள்ளது.

வலமிருந்து இடம் :

6. இதற்கு குதிக்கத் தெரியாது.









8. காட்டுக்கே இராஜா இதுவாம்.

14. தானமாகவும் கோவிலுக்குத் தரப் படும்.

15. பசித்தாலும் புல்லைத் தின்னாது.

மேலிருந்து கீழ்

2. துருவப் பிரதேசத்தில் அதிகம் காணப்படும்.

3. எலிக்கும் இதற்கும் போராட்டம் தான்.



கோபுரம்

9. சண்டை போட்டுக் கொள்பவரை இதுவும் பாம்பும் போல் என்பார்கள்.

12. ஆமையிடம் தோல்வி அடைந்தது.

கீழிருந்துமேல்

5. வீட்டின் காவல்காரன்.

7. பொதி சுமக்கப் பயன்படுகிறது.

11. இதிலிருந்து பிறந்தவன் மனிதன் என்கின்றனர்.

13. தந்திரம் நிறைந்தது.

- பி.கே.ஷியாம், உறுப்பினர் எண் : 7, ஏழாம் வகுப்பு, ஸ்ரீமாதா மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளி, கும்பகோணம்



III. இங்குள்ள கட்டங்களில் சில மிருகங்களின் பெயர்கள் உள்ளன (கீ-மே, மே-கீ, இ-வ; வ-இ; கு-23). அவற்றைக் கண்டுபிடியுங்கள்!

கு	ந	சி	ப	னை	னை	பூ	ம்
ப	ரி	ண்	எ	ரு	து	க	யா
க	ரி	ங்	தை	க	ங்	மு	னை
ம்	சி	மு	கு	சி	த	பு	ண்
தை	க	ர	டி	லை	லி	வா	மா
த்	நா	ட	பு	லி	ரை	ன்	பா
நா	ய்	பா	ட்	ழி	தி	கோ	ம்
சி	ய்	நா	ஒ	ஒ	கு	ழி	பு

- என்.நர்மதா, ஐந்தாம் வகுப்பு, செயின்ட் ஜோசப் க்ளூனி பெண்கள் மேல்நிலைப் பள்ளி, புதுச்சேரி



விடைகள் : 56-ஆம் பக்கம்

புலியைத் தின்னாதே!

கதை : வீரசிகாமணி ஆதீனமிளகி   படம் : பிள்ளை




வழியில்...
குருவே! எப்படி கண்டு பிடிச்சீங்க?
அதுவா? கட்டிலுக்குக் கீழே கடலைத் தோல் இருந்தது.
ப்பூ... இவ்வளவுதானா? இனி நானே வைத்தியம் பார்ப்பேன்.
மறு நாள்...
குருவே, நான் போய் பார்க்கிறேன்.
ஐயா, என் அப்பாவுக்கு முடியலை.
சரி; பாத்து மருந்து கொடு
தண்டபாணி கிளம்பினான்.
ம்... நான் கெட் டிக்கார வைத்தியன் என்று நிருபிக் கிறேன்.
இந்த மருந்தை சாப்பிடுங்கள் குணமாகி விடும்.
அடுத்த நாள்...
இன்னும் குண மாகவில்லையா?
நான் சொன்னபடி கேட்கவில்லை.
என்ன?
ஆமாம். புலியை அடித்து சாப்பிடலாமா?
பு... புலியா?
அதான் கட்டி லுக்குக் கீழே புலித்தோல் இருக்கே.
நீயெல் லாம் ஒரு வைத்தியர்!

தமிழகம்...

தமிழகத்தில் மிகப் பெரியவை :

மிகப் பெரிய கோவில் : தஞ்சை பிரகதீஸ்வரர் கோவில்

மிகப் பெரிய தேர் : திருவாரூர் தேர்

மிக நீளமான ஆறு : காவிரி (760 கிலோ மீட்டர்)

மிக நீளமான கடற்கரை : சென்னை மெரீனா

மிக உயர்ந்த சிகரம் : ஆனை முடி (2697 மீட்டர்)

மிகப் பெரிய பாலம் : பாம்பன்

மிகப் பழைய அணைக்கட்டு : கல்லணை

மிகப் பெரிய அணை : மேட்டூர்

மிகப் பெரிய மாவட்டம் : தருமபுரி

மிக உயர்ந்த கோபுரம் : ஸ்ரீரங்கம் கோவில்

தொகுப்பு : ப.எழிலன், சென்னை



* ஸ்ரீரங்கம் கோபுரம்



* தஞ்சை பிரகதீஸ்வரர் கோவில்




* கல்லணை




பெரிய

* காவிரி

ப. எழிலன்




* பாம்பன் பாலம்




* மேட்டூர் அணை

பாலம்!



* திருவாரூர் தேர்



* சென்னை மெரினா கடற்கரை

வேலன் நேர்மையான விவசாயி. ஒரு நாள் வயலில் வேலைப் பார்த்துக்கொண்டிருக்கும்போது, அவனது கால்களில் ஏதோ தட்டுப்பட்டது. உடனே அந்த இடத்தைத் தோண்டினான். அங்கே ஒரு மரப்பெட்டி இருந்தது. அதை வெளியே எடுத்துத் திறந்தான். அதில் சின்ன தேவதையைப் போன்ற சிலை இருந்தது. அது பார்க்க அழகாக இருந்தது. அதை மனைவியிடம் கொடுத்து பத்திரமாக வைக்கச் சொன்னான். அவளும் பெட்டிக்குள் வைத்து மூடினாள்.

அன்று இரவு வள்ளி சற்று அதிகமாகவே சமைத்து விட்டாள். எனவே சாதம் மிஞ்சிவிட்டது. "சரி, தண்ணி ஊத்தி வச்சா நாளைக்கு பழைய சோறுக்கு ஆகும்" என்று அதில் தண்ணீர் ஊற்றிவைத்து விட்டுப் படுக்கச் சென்றுவிட்டாள்.



மறுநாள் காலை...

"வள்ளி, வயல்ல வேலை கொஞ்சம் அதிகமா இருக்கு. சாப்பிட எதுனாச்சும் செய்" என்றான் வேலன்.

உள்ளே போய் பழைய சோறு இருந்த பாத்திரத்தைத் திறந்தாள். அதில் ஒரு பருக்கை கூட இல்லை. பாத்திரம் சுத்தமாக இருந்தது. "என்னங்க! நேத்து இராத்திரி வச்ச பழைய சோத்தைக் காணோம்ங்க!" என்றாள் வள்ளி வியப்புடன்.

அதைக் கேட்டு சிரித்த வேலன், "ஆமா பேய் வந்து சாப்பிட்டுருக்க" என்றான்.

சி. மோனிஷா

"இல்லங்க; நான் வச்சேனே..." என்றாள் வள்ளி.

"இந்தாப் புள்ள, வச்ச சோறு அந்த இடத்துலதானே இருக்கும். கை, காலு முளைச்சு பறக்குமா?" என்றான் சற்று கோபமாய்.

"இல்லங்க..." வள்ளி சொல்லி முடிப் பதற்குள்...

"அட போ புள்ள" என்றான் எரிச்ச லுடன்.

அப்போதுதான் கண்விழித்த சுப்பு, "ஐ பொம்மை" என்று துள்ளிக் குதித்தான்.

வள்ளிக்கு மண்டையே குழம்பி விடும்போல் இருந்தது.

குழந்தைக் கவிஞர்
அழ. வள்ளியப்பா
நினைவுச் சிறுகதைப்
போட்டியில்
மூன்றாம் பரிசு
ரூ.250/-
பெறும் சிறுகதை - 1

"அதை பெட்டிக்குள்ளேதானே வைத் தேன்" என்றாள்.

அப்பொழுது 'டொப்' என்று ஒரு சத்தம்! திரும்பினால், சுப்பு விளையாடிக் கொண்டிருந்த அந்த பொம்மை கீழே விழுந்து இரண்டாக உடைந்திருந்தது. சுப்புவின் முகம் வாடிப் போனது.

"சரி! சரி! வந்து பாலைக் குடி" என்றாள் வள்ளி.

சுப்பு பாலைக் குடித்துவிட்டு விளை யாடப் போனான். அவனுக்கு கோலி விளையாடுவது மிகவும் பிடிக்கும். உடைந்த பொம்மையை மரத்தடியில் வைத்துவிட்டு விளையாடிக் கொண்டிருந் தான். அவன் மிகவும் குள்ளமாக இருப்பதால் அவனை மற்ற சிறுவர்கள் குள்ளன் என்று கிண்டலடித்தனர்.

அவனால் பொறுத்துக் கொள்ள முடி யாததால் "போங்கடா முட்டாள்களா" என்றான். அதில் குண்டாக இருந்த பையன் சுப்புவை கீழே தள்ளிவிட்டான். கீழே விழுந்த சுப்புவுக்குக் கையில் காயம். அழுதுகொண்டே அந்த பொம்மையருகில் சென்று அமர்ந்தான்.

அவனைப் பார்த்து சிரித்த அந்த சிறுவர்கள் திடீரென்று வரிசையாக கீழே விழுந்தனர். அவர்கள் அனைவருக்கும்

சுப்புவும் குட்டி தேவதையும்!

இரு கைகளிலுமே காயம். அப்பொழுது சுப்புவை அடித்த அந்தக் குண்டுப் பையன். "டேய் சுப்புவுக்கு ஏதோ மந்திர சக்தி இருக்குடா. எல்லோரும் அவன்கிட்ட மன்னிப்புக் கேட்டுருங்கடா" என்றான்.

அவர்கள் எல்லாரும் சுப்புவிடம் மன்னிப்புக் கேட்டுவிட்டு ஒரே ஓட்டமாய் ஓடிவிட்டனர். சுப்பு ஆச்சர்யப்பட்டுத் திரும்பினான். உடைந்திருந்த பொம்மை ஒன்றாய் சேர்ந்திருந்தது. அப்பொழுது திடீரென்று ஒரு குரல். "சுப்பு உன்னை அம்மா தேடிட்டிருக்காங்க."

அவ்வளவுதான்; பொம்மையை மறந்து ஓட்டமாய் ஓடினான் சுப்பு!

சாப்பிட்டான். வீட்டுக்குள்ளேயே விளையாடினான். பொம்மை ஞாபகமே வராமல் தூங்கிப் போனான்.

திடீரென்று தூக்கம் கலைந்தது அவனுக்கு. 'ஐயோ பொம்மையை அங்கேயே விட்டுவிட்டேனே...' என்று மரத்தடிக்கு ஓடினான். ஆனால் அங்கு பொம்மை இல்லை. அழுதுகொண்டே வீட்டுக்கு வந்தவன் அப்படியே தூங்கிப்போய்விட்டான்.

காலையில்... அவன் தலையணைக்கு அருகே அந்த பொம்மை இருந்தது. அதைக் கண்டு அவனுக்கு மகிழ்ச்சியாக இருந்தது. "ஆனா இதெப்படி இங்கு வந்தது?" புரியவே இல்லை அவனுக்கு.

அப்பொழுது யாரோ அழுவது போல தோன்றியது. பார்த்தால் பொம்மையின் கண்ணிலிருந்து கண்ணீர் வந்து கொண்டிருந்தது. உற்றுப் பார்த்தான்.

அந்த பொம்மை பேச ஆரம்பித்தது. "நான் ஒரு குட்டி தேவதை. எங்கள் உலகத்தில் என்னுடன் விளையாட யாருமேயில்லை. அதனால் பூமிக்கு விளையாடத்தான் வந்தேன். ஆனால் இப்பொழுது எனது அம்மாவையும் அப்பாவையும் பார்க்க வேண்டும் போலுள்ளது. அன்று உங்கள் வீட்டில் சோற்றைத் தின்றதும் நான்தான்" என்று சொல்லி அழுதது.

"சரி, அழாதே. இனிமே நான் உன்னுடைய ஃபிரண்டு" என்றான் சுப்பு. அன்று முதல் இருவரும் ஒன்றாய் விளையாடச் செல்வதும் வருவதுமாய் சந்தோசமாக இருந்தனர்.

விடையைச் சொல்; பரிசை வெல்-15ல் கலந்துகொண்டு சரியான விடைகளை நூற்றுக்கணக்கானோர் அனுப்பி இருந்தனர். ஆகவே, பரிசுத் தொகையான ஆயிரம் ரூபாயை குலுக்கல் மூலம் பத்து பேருக்கு தலா **ரூ.100/-** வீதம் வழங்குகிறோம்.

சரியான விடைகள் :

1.இப்னு ஜமால், 2.செமாரெங், 3.சுரேந்திர நாத் பானர்ஜி, 4.ஜான் ரோஜர்ஸ், 5.மீனா

பரிசு பெறுவோர் :

1. கோ.இளம்பாரதி, ஆலாம்பாளையம்
2. ரி.ச.ஜேஸ்மின் சிந்தியா, சென்னை
3. நீ.யமுனா, கோவை
4. செ. கனிஷ்காந்த், திண்டுக்கல்
5. டி.டிவின் ராஜ், சரல்
6. ஸ்ரீபாலாஜி, புதுக்கோட்டை
7. வி. பெர்னாட்ஸ்ஷா, தூத்துக்குடி
8. ஜி.சாய் லெட்சுமி, கிருஷ்ணாபுரம்
9. எம்.பால்துரை, கோணம்
10. வைஷ்ணவி ராஜேஷ், செகந்திராபாத்

பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகள்; கலந்துகொண்ட அனைவருக்கும் நன்றி!

ஒருநாள் சுப்புவும் அந்த பொம்மையும் விளையாடி கொண்டிருந்தனர். அப்பொழுது சிறகுகள் முளைத்த ஆண் தேவதை ஒன்றும் பெண் தேவதை ஒன்றும் சுப்புவை நோக்கி வந்தார்கள். அதைக் கண்ட அந்த குட்டி தேவதை "அம்மா, அப்பா வந்துவிட்டீர்களா" என்றது.

அவர்களுக்கு சுப்புவை அறிமுகப்படுத்தியது. "இவன்தான் சுப்பு. இத்தனை நாட்களாக நான் இவன் வீட்டில்தான் இருந்தேன். என்னை நன்றாகப் பார்த்துக்கொண்டான்" என்றது. அதற்கு அம்மா தேவதை, "ரொம்ப நன்றி சுப்பு" என்றது.

"உனக்கு எப்ப எந்த உதவி வேண்டுமானாலும் கேள். நான் அதைப் பண்ணுவேன்" என்றது அப்பா தேவதை.

சுப்புவோ "நீ என்னை விட்டுட்டு போறியா?" என்று குட்டி தேவதையைக் கேட்டு கண்கலங்கினான்.

"யார் சொன்னா? என்னை நினைத்து நீ இந்த மணியை அடித்தால் போதும்; உடனே நான் வந்து விடுவேன். பிறகு



நாம் இருவரும் சந்தோஷமாக விளையாடலாம்" என்றபடியே, அவனிடம் மணியைக் கொடுத்தது குட்டி தேவதை.

அப்பொழுது திடீரென்று ஒரு குரல் கேட்டது : "டேய் சுப்பு என்னடா நடக்குது இங்கே?" திரும்பினான். பின்னால் சுப்புவின் தாயும் தந்தையும் நின்று கொண்டிருந்தனர். அந்த பொம்மையின் பெற்றோர் சுப்புவின் பெற்றோரிடம் வந்து நன்றி கூறிவிட்டு கிளம்பத் தயாரானார்கள்.

அப்போது குட்டித் தேவதை, "சுப்பு, நான் இங்கே இருந்தவரை என்கிட்ட ரொம்ப அன்பா இருந்த. உன்னோட நட்பு கிடைச்சதுதான் எனக்கு சந்தோஷம்!" என்றது.

அதற்கு அப்பா தேவதை சொன்னது.

"நட்புக்கு எந்த வரம்பும் இல்ல. எந்த வித்தியாசமும் இல்ல. மழைத்துளி மாதிரி தூய்மையானது நட்பு! அப்படியொரு நட்பும், நண்பனும் அமைஞ்சா அதுதான் அதிர்ஷ்டம்!" ●



அடர்ந்த காட்டில், ஒரு மர உச்சியில் தேன்கூடு இருந்தது. நாள்தோறும் தேனீக் கள் காடு முழுவதும் பறந்து சென்று தேனைச் சேகரித்து வரும். காற்றையடுத்து இந்தத் தேனீக்கள்தான் காட்டைப் பகுதி





மனம் மாறிய மலையரசி

பகுதியாக அறிந்து வைத்திருந்தன. 'சின்னி' தேனீயும் அவற்றில் ஒன்று. ஒவ்வொரு நாளும் முன்பு செல்லாத பகுதிக்குச் செல்வதையே அது வழக்கமாகக் கொண் டிருந்தது.

அந்தக் காட்டின் மேற்குப் பக்கத்தில் பசுமையான புதர்களும், செடிகளும் நிறைந்திருந்தன. கொன்றை, செவ்வரளி, சங்குப்பூ, செவ்வந்தி, மலையரசி - போன்ற வண்ண வண்ண மலர்கள் அங்கே பூத்துக் குலுங்கும். அவற்றில் மலையரசி மட்டும் கொஞ்சம் பெருமிதம் உடையது.

'பச்சைப் பசேல்' என்று விரல் அகலத்தில் நீண்ட இலைகளைக் கொண்ட செடியில், சந்தன நிற இதழ்களும்; இதழ்கள் இணையும் இடத்தில் மஞ்சளும் சிவப்பும் கலந்த பொன்னிறமும் கொண்டு பூத்திருக்கும் தன் மேனியழகில் அது கர்வம் கொண்டிருந்தது. இதனால் அது தேனை இழப்பதை விரும்பவில்லை. 'என்னிடமுள்ள தேன் எனது சொத்து அல்லவா; ஒருபோதும் தேனை எடுத்துச் செல்ல தேனீக்களை அனுமதிக்கமாட்டேன்' என்று உறுதி கொண்டிருந்தது.

சின்னி ஒரு நாள் காட்டின் மேற்குப் பக்கமாக வந்தது. பல வண்ண மலர்களைப் பார்த்த உற்சாகத்தில் 'உய்ங்...' என்று சீட்டியடித்தவண்ணம் மலையரசியின் அருகில் சென்றது.

கோபத்தில் இதழ்களைச் சிலிர்த்துக் கொண்ட மலையரசி, "தம்பீ...நில்" என்றது.

"என் பெயர் தம்பி இல்லை; சின்னி!" என்றது சின்னி.

சுற்றியிருந்த மலர்களெல்லாம் தலையைத் திருப்பி, கவனிக்கத் தொடங்கின.

"உன் பெயர் எனக்குத் தேவை இல்லை. என்னிடமுள்ள தேன் எனது உரிமை. என் அனுமதியின்றி அதை நீ கவர்ந்து செல்லக்கூடாது" என்றது மலையரசி.

உடனே சின்னி, "அக்கா! உன்னிடமுள்ள இந்தத் தேனை எவ்வகையிலாவது நீ பயன்படுத்த முடியுமா? அதைப் பிறர்க்குப் பயன்படுமாறு செய்வதில் உனக்கு ஏன் தயக்கம்?" என்றது.

மலையரசியும் சளைக்காமல், "என்னிடமிருந்து எடுத்துச் செல்லும் தேனை நீ மட்டும் என்ன பயன்படுத்தவா போகிறாய்? உன் கூட்டில் சேகரித்து வைத்த தேனையெல்லாம் யாராவது மனிதர்கள்தானே எடுத்துச் சென்று பயன்பெறப் போகிறார்கள். அவர்களுக்காக நீ ஏன் உன் உடம்பை வருத்தி உழைக்கிறாய்?" என்றது.

"உழைப்பது எனது இயல்பு. அதன் பயனை நானும், என்னைச் சார்ந்தவர்களும் மட்டுமே பெறவேண்டும் என்பது குறுகிய எண்ணம். எனது உழைப்பு வீணாகாமல் யாருக்கேனும் பயன்படுகிறது என்பதில்தான் உழைப்பின் மகிழ்ச்சி இருக்கிறது. மனிதர்களிடம் இல்லாத ஆற்றல் என்னிடம் இருக்கிறது. அதைக் கொண்டு அவர்களுக்கு நன்மை செய்ய முடிவதில் நான் பெருமை அடைகிறேன். உனக்கு விருப்பமில்லாவிட்டால் விட்டுவிடு... நான் வருகிறேன்" என்றவாறு சிறகை விரித்து சின்னி.

மனம் திருந்திய மலையரசி, "சின்னீ... நில்! என்னுடைய வாழ்க்கையும் பயனுடையதாக வேண்டும். எனவே தேனைச் சேகரித்துக் கொள்" என்றது.

மென்மையான காற்று வீச, அருகிருந்த மலர்கள் எல்லாம் தலையசைத்து ஆமோதித்தன. ●

பாட்டியின்

"என்ன ஆனந்தி, நாளையில இருந்து பரீட்சை ஆரம்பமில்ல. படிக்காம அங்க என்ன பண்றே?"

பாட்டியின் குரலைக் கேட்டுத் திரும்பினாள் ஆனந்தி.

"பாட்டி நான் எல்லாப் பாடத்தையும் ரொம்ப நல்லாப் படிச்சுட்டேன். அதான் விளையாடறேன்" என்றாள்.

"அப்படிச் சொல்லக்கூடாது ஆனந்தி. எவ்வளவுதான் படிச்சிருந்தாலும், கடைசி நேரத்துல ஒரு தடவை படிச்சு ஞாபகம் வச்சுக்கறது நல்லது"

பாட்டி சொன்னாலும், ஆனந்தி விடவில்லை.

"இல்ல பாட்டி... நான் தினமும் பாடத்தைப் படிச்சிருவேன். அதனால, இன்னொரு தடவை படிக்க வேண்டாம்"

பாட்டியும் தொடர்ந்தாள்.

"அது சரி ஆனந்தி, எவ்வளவுதான் படிச்சிருந்தாலும், இன்னொரு வாட்டி புரட்டிப் பாரு.



அதுதான் நல்லது. நல்லாப் படிச்சேன்ற. அப்புறம் ஏன் நூத்துக்கு நூறு வாங்க முடியலை?"

பாட்டி கேட்டவுடன் சுருக்கென்றது ஆனந்திக்கு.

"அது... அந்த டீச்சருக்கு மார்க் போடணுமின்னா மனசே

பி.எஸ். ஜேம்ஸ்



பாடம்!

வராது'' என்றாள் வேகமாக.

''அப்படியெல்லாம் சொல்லக்கூடாது. நாம இன்னும் நல்லா எழுதணும்னு நினைக்கணும்.''

பாட்டி சொன்னதற்கு ஆனந்தி ஏதோ பதில் சொல்ல முற்பட்டாள். அதற்குள் வெளியே பால் வண்டியின் சத்தம் கேட்டது.

''சரி, சரி... வாசல்ல பால்காரன் வந்திருக்கான். போய் பாலை வாங்கி வை'' என்றாள் பாட்டி.

கவிழ்த்து வைத்திருந்த பால் செம்பை, தண்ணீரில் கழுவி எடுத்துச் சென்றாள் ஆனந்தி. பாலை வாங்கி வந்து அடுப்படியில் வைத்தாள்.

அதைக் கவனித்த பாட்டி,

''ஏன் ஆனந்தி, இப்ப நீ என்ன பண்ணின?''

''ம்... பால் வாங்கிட்டு வந்தேன்.''

''அதுக்கு முன்னால என்ன செய்தே?''

''ம்... பால் செம்பை கழுவி எடுத்துட்டுப் போனேன்'' என்றாள் யோசித்து.

''காலைல உன் அம்மா கழுவி வெச்ச செம்புதானே, அப்புறம் எதுக்கு நீ கழுவின?''

''ம்... அம்மா காலைல கழுவினது. அப்புறம் தூசி ஒட்டியிருக்கும்ல?''

பாட்டி விடாமல் கேட்டாள் :

''கவுத்து வெச்ச செம்புக்குள்ள எப்படி தூசு போகும்?''

''ம்... எப்படி இருந்தாலும் நாம புழங்கறதுக்கு முன்னால கழுவறதுல தப்பில்லையே?''


ஆனந்தி சொன்னதைக் கேட்ட பாட்டி சிரித்தபடியே சொன்னாள் :

''அதைத்தான் நானும் சொன்னேன் ஆனந்தி. எவ்வளவுதான் நல்லாப் படிச்சிருந்தாலும் பரீட்சைக்குப் போறதுக்கு முன்னால ஒரு தடவை படிக்கறதுல தப்பு இல்லியே.''

ஆனந்திக்கு தன் தவறு புரிந்தது.

''உண்மைதான் பாட்டி. இதோ படிக்கப் போறேன்'' என்று புத்தகங்களை எடுக்க நடந்தாள்.

பாட்டியின் முகத்தில் புன்னகை மலர்ந்தது.



கூலாவின்

'சே! எங்கே பார்த்தாலும் மருந்தை அடித்து விரட்டுகிறார்கள். எங்கே சென்று தங்குவது?' என்ற கவலையுடன் பறந்து கொண்டிருந்தது கொசு குப்புராஜ். அதன் குடும்பமும் பின்னால் பறந்து வந்து கொண்டிருந்தது.

எல்லாத் தெருக்களும் சுத்தமாக இருந்தன. வீடுகளும் சுத்தமாக இருந்தன.

''என்னங்க, நாம வசிக்க ஒரு நல்ல வீடு கிடைக்காதா'' என்று கேட்டது மனைவி மருதி.

''இரு... இரு... நமக்குன்னு ஒரு வீடு அமையாமலா போய்டும்?'' என்றபடியே பறந்த குப்புராஜ் பார்வையில் பட்டது அந்தத் தெரு.

சாக்கடைத் தண்ணீர் தேங்கியும், குப்பை கூளங்கள் சேர்ந்து அந்தத் தெரு பெரிதும் சேறாக்க கிடந்தது. அங்கிருந்த ஒரு வீட்டினுள் இந்த கும்பல் நுழைந்தது.

''அடடா...இதுதான் நாம் வசிப்பதற்கு ஏற்ற வீடு. எங்கு பார்த்தாலும் பொருள்கள் சிதறிக் கிடக்கு. கொடிகளில் துணிகள், தொட்டிகளில் நாள்பட்ட தண்ணீர், உடைந்த பானைகள், பின்னால் தேங்கிய கழிவுநீர்... இதுதான் நமக்கு ராஜமாளிகை! இங்கேயே தங்கிவிடலாம்.''



உற்சாகமாகப் பேசின கொசுக்களெல்லாம்.

ரீங்கரித்தபடியே எல்லாம் ஆடிப்பாடின. அப்போது கொசு குப்புராஜ் சொன்னது.





கனவு

''விளையாடியது போதும். சீக்கிரம் ஆகட்டும். இந்த வீட்டுக்காரர்கள் எப்போது வேண்டுமானாலும் மனம் மாறிவிடலாம். வீட்டைச் சுத்தம் செய்து விடலாம். அதற்கு முன் நம்முடைய கொசு இனத்தை அதிகரிக்க வேண்டும்.''

அது முடிக்கும் முன்பே மருதி ''மலேரியா, சிக்கன்குனியா என்று பல்வேறு நோய்களை நாம் பரப்புவோம். அப்போதுதான் அவர்கள் நோயோடு போராடுவதில் இருப்பார்கள். இல்லாவிட்டால் நம்மை விரட்டும் வழியைத் தேடுவார்கள்.''

திடுக்கிட்டு விழித்தாள் கலா.

அவள் முகத்தைச் சுற்றி ஒலி யெழுப்பியவாறு பறந்தது ஒரு கொசு.


''இத்தனை நேரம் நான் கண்டது கனவா... இல்லை இந்தக் கொசுவின் பேச்சா?'' குழம்பிப் போனாள்.

'எதுவாய் இருந்தாலும் சரி. இனி மேல் வீட்டை அசுத்தமாக வைப்ப தில்லை' என்ற முடிவுடன் பரபரப்பாக இயங்கினாள்.

வீடு தூய்மையானது.

சொன்னாலும் செய்யாத கலா திடீரென்று வீட்டை சுத்தம் செய்ததால் அவள் பெற்றோர் ஆச்சரியமாய் பார்த்தனர். கொசுக் கனவு பற்றி அவர்களுக்குத் தெரியுமா என்ன?

- ரா.சீதாராமன், எட்டாம் வகுப்பு,
உ. எண் : 449,
டி.வி.எஸ். மேல்நிலைப் பள்ளி,
மதுரை - 11



கண்ணீர் மலை!

சோவியத் நாட்டிலுள்ள ஒரு மலையைக் 'கண்ணீர் மலை' என்று அழைக்கிறார்கள். இதனை ஆங்கிலத்தில் Crying mountain என்கிறார்கள். இந்த மலையில் திடீரென நீர் கசியத் தொடங்கிவிடும். அப்போது இம்மலை கண்ணீர் சொரிவதாகத் தோன்றும். அந்தக் கண்ணீரை துடைக்கும் கைகுட்டையைப் போல மழைவரும். இதனால் இந்த மலையை கண்ணீர் மலை என்று அழைக்கிறார்கள். எப்போதாவது பூமி வறட்சியாகக் காணப்பட்டால், இந்த கண்ணீர் மலையை வணங்கத் தொடங்கிவிடுகின்றனர். அப்போது பூமியை குளிரச் செய்வதற்காக கண்ணீர் மலை அழும். மழையும் பொழியும். இந்த மலைக்கு 'பக்குவாரா' என்றும் பெயர் வழங்கப்படுகின்றது.



- கு.நித்யானந்தன்,
உ. எண் : 3, திருச்சி

தமிழும் ஐந்தும்!



1. ஆற்றுப்படை ஐந்து
   1. திருமுருகாற்றுப்படை
   2. பொருநராற்றுப்படை
   3. பெரும்பாணாற்றுப்படை
   4. கூத்தராற்றுப்படை (மலைபடுகடாம்)
   5. சிறுபாணாற்றுப்படை

2. இலக்கணம் ஐந்து
   1. எழுத்து
   2. சொல்
   3. பொருள்
   4. அணி



மூன்று வயிறுகள்!





- திருநெல்வேலியின் புராணப் பெயர் **வேணுவனம்.**
- தீயினால் எரியாத மரம் **டமாரஸ் கிராப்**
- துப்பறியும் நாயைப் பயன்படுத்திய முதல் நாடு **பிரான்ஸ்**
- பிரஷர் குக்கரை கண்டுபிடித்தவர் **டெனிஸ் பாபின்**
- ஒட்டகத்துக்கு **மூன்று** வயிறுகள் உள்ளன.
- அரிசி பிறந்தது **கி.மு. 5000ல்**
- **ஆக்டோபஸ்** என்ற கடல் உயிரினத்தின் ரத்தம் நீலநிறமாக இருக்கும்.
- முதன் முதலில் தயாரிக்கப்பட்ட ஸ்கூட்டரின் பெயர் **'வெஸ்பா'**

- ஆர்.பிரணவ்ராஜ், உறுப்பினர் எண் : 356, பத்தாம் வகுப்பு,
கிறைஸ்ட் தி கிங் மேல்நிலைப் பள்ளி,
கும்பகோணம்

5. யாப்பு

3. பெருங்காப்பியங்கள் ஐந்து

1. சீவகசிந்தாமணி
2. சிலப்பதிகாரம்
3. மணிமேகலை
4. குண்டலகேசி
5. வளையாபதி

4. பா வகைள் ஐந்து

1. வெண்பா
2. ஆசிரியப்பா
3. கலிப்பா
4. வஞ்சிப்பா
5. மருட்பா

5. நிலம் ஐந்து

1. குறிஞ்சி
2. முல்லை
3. மருதம்
4. நெய்தல்
5. பாலை

- என்.அமிர்தஸ்ரீ, உ. எண் : 257,
பத்தாம் வகுப்பு, நாய்ஸ்
மெமோரியல் மெட்ரிக்
மேல்நிலைப் பள்ளி, மதுரை

கண்கள் ஒளி பெற...





நம்முடைய உணவில் கீரைகளை சேர்த்துக் கொள்வது உடலுக்கு மிகவும் நல்லது. இதோ சில கீரைகள் தரும் பலன்கள் :

1. **வல்லாரைக்கீரை** : ஞாபகசக்தி, மூளை வளர்ச்சி, நரம்புதளர்ச்சிக்கு உகந்தது.
2. **பொன்னாங்கன்னிகீரை** : கண்பார்வை ஒளிர, கண்நோய்க்கு நல்லது
3. **மணத்தக்காளி கீரை** : அல்சர், வயிற்று கடுப்பு, குடல், தொண்டை, வாய் புண்ணுக்கு நல்லது.
4. **கரிசலாங்கண்ணி கீரை** : காமாலை, கல்லீரல் ஈரல் சம்பந்தநோய் போக்க உகந்தது.
5. **வாத நாராயண கீரை** : வாத நோய் தீர்க்கும்
6. **புதினா கீரை** : விக்கலைப் போக்கி இரத்தம் பெருக உதவும்
7. **அகத்திக்கீரை** : உஷ்ணம் நீங்கி, வாய்ப்புண் நீக்கும்.
8. **தூதுவளைக் கீரை** : சளி, இருமல், தோல் வியாதிக்கு சிறந்தது
9. **முருங்கைக் கீரை** : உஷ்ணத்தை தணித்து, தலைநோய், வெறிநோய் கண்நோய், செரியாமை இரத்த விருத்திக்கு உகந்தது.
10. **சிறுகீரை, முளைக்கீரை, அரைக்கீரை** : உடல் வலிமைக்கு சத்து நிறைந்தது.


- எஸ்.ஸ்ரீநிவாஸ், ஆறாம் வகுப்பு, கிரீன் பார்க் மெட்ரிக் பள்ளி, ஆத்தூர், சேலம் மாவட்டம்.



வண்ணம் தீட்டுங்கள்!

ஓவியம் : கு. நித்யானந்தன்,
கொடாப்பு கிராமம்.

இங்குள்ள
படத்தை
உங்கள்
கைவண்ணத்தால்
அழகுபடுத்துங்க
குட்டீஸ்!





I

1. நீரிலே பிறந்து
   நீரிலே வளர்ந்து
   வீதியிலே வந்து
   நீரிலே அழியும் - அது என்ன?

2. வாலிபத்தில் பசுமைநிறம்
   முதுமையில் மஞ்சள்நிறம்
   வீழ்ந்தபின் பழுப்பு நிறம் - நான் யார்?

II தலையிலே கொண்டை

1. இன்று - நொண்டி நடப்பது எதனாலே? அன்று - நெல்லை அளந்தது எதனாலே?

2. நாய் ஓடுவதேன்? நாக்கு தித்திப்பதேன்?

3. குழந்தைகள் செல்லும் கூடம்;
   தொழுகைக்குச் செல்லும் இடம் - அது எது?

4. தமிழ் மாதங்களில் ஒன்று;
   முகம் பார்க்கவும் உதவும் - அது எது?



- பா.முகுந்தன்,
சென்னை

3. ஆயிரம் கண் உண்டு கண்ணாத்தாளுமில்லை; ஆறுகால் உண்டு பெஞ்சுமில்லை; நான்கு இறக்கை உண்டு ஹெலிகாப்டரு மில்லை; நீண்ட வாலுண்டு குரங்குமில்லை - அது என்ன?

- வி.பி.மதிமலர்,
உறுப்பினர் எண் : 77,
ஆவுடையாள்புரம்

காலிலே முள்!



III

1. ஆயிரம் பேர் கட்டிய மண்டபம் ஒரு கல்லால் அதிர்ந்து விழுந்தது - அது எது?

2. மரத்திலே பூத்த பூ, தலையில் சூட முடியாத பூ - அது என்ன பூ?

3. மூன்று நிற கிளிகள் குகைக்குள் போய் ஒரே நிறத்தில் திரும்ப வந்தன - அவை எவை?

4. ஆயிரம் பேருக்கு ஒரு அரைஞாண் கயிறு-அது எது?

5. ஊதிப் பெரிசாக்கினால் ஒன்றும் இல்லாமல் போய் விடுவான் - அவன் யார்?

- எம்.எஸ்.ஷண்முகப்ரியா,
உறுப்பினர் எண் : 622,
சேலம்



விடைகள்:

I. 1. உப்பு, 2. இலை, 3.தட்டாம்பூச்சி

II. 1.மரக்காலால் 2.கல்கண்டு, 3.பள்ளி, 4.ஆடி

III. 1. தேன்கூடு, 2.வாழைப்பூ, 3.வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு, 4. துடைப்பம், 5.பலூன்



சரியான்னு பாருங்க!

I. 1. தை, 2. ரோஜா, 3. தவளை 4. கண்ணாடி 5.ஆலமரம் 6.தொலைக் காட்சி

II. குறுக்கெழுத்துப் புதிர் : 1.முஞ்சூறு 2.பென்குவின், 3. பூனை, 4.மான், 5.நாய், 6.யானை, 7.கழுதை, 8.சிங்கம், 9.கீரி, 10.வரிக் குதிரை, 11.குரங்கு 12.முயல், 13,நரி, 14. பசு, 15.புலி, 16.அணில்

III.சிங்கம், யானை, முதலை, புலி நரி, மான், கரடி, ஓநாய், பாம்பு, சிறுத்தை, கழுதை, பசு, பன்றி, ஒட்டகம், பூனை, குதிரை, குரங்கு, எருது, வான்கோழி, ஆமை, நாய்,

வித்தியாசங்களைக் கண்டுபிடி!

1.வண்ணத்துப் பூச்சி சிறகில் புள்ளிகள், 2.புற்கள், 3.தொப்பியின் நிறம், 4.மேகம், 5.பூ.

அன்பு நண்பர்களே...

'கோகுலம் எக்ஸ்பிரஸ்' பகுதிக்கு கதை, கவிதை, அறிவியல் துணுக்குகள், புதிர்கள், சுற்றுலா அனுபவம், பள்ளி மற்றும் வீட்டில் நடந்த பல்சுவை அனுபவங்களை எழுதியனுப்புங்கள். படைப்புகளுடன் உங்கள் பெயர், வகுப்பு, பள்ளி, வீட்டு முகவரியைத் தெளிவாக குறிப்பிட வேண்டும். அனுப்ப வேண்டிய முகவரி :

ஆசிரியர் - கோகுலம்

(எக்ஸ்பிரஸ் பகுதி)

47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 032

படைப்புகளை அனுப்புங்கள்; பங்கேற்று அசத்துங்கள்!

கோகுலம் சிறுவர் சங்கம்

பட்டியல்

இந்த மாதமும் பட்டியல் தொடர்கிறது. இவர்களின் புகைப்படங்கள் இரண்டாவது, மூன்றாவது அட்டைகளில்!

701. ச.ரவிசங்கர், பதினொராம் வகுப்பு, ஜி.டி. மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, கோவை
702. அதிதி கனகதாரா, ஒன்றாம் வகுப்பு, இகோல் புனித ஜோசப் பள்ளி, கனடா
703. இ.பவதாரணி, எட்டாம் வகுப்பு, சாவித்ரி வித்யாசாலா, திருச்சி
704. இரா. அஸ்வின், நான்காம் வகுப்பு, யாகப்பா மெட்ரிகுலேஷன் பள்ளி, தஞ்சாவூர்
705. அ.தீன் முகம்மது, பத்தாம் வகுப்பு, அல் அமீன் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, சோழபுரம்
706. எஸ்.கார்த்திக், மூன்றாம் வகுப்பு, செயின்ட் மேரிஸ் நர்சரி மற்றும் பிரைமரி பள்ளி, தேவகோட்டை
707. பி.நரேஷ்குமார், மூன்றாம் வகுப்பு, கலைமகள் மெட்ரிக் பள்ளி, கும்மிடிப்பூண்டி
708. எஸ்.செந்தில்வேல், எட்டாம் வகுப்பு, பி.ஆர்.எம். நடுநிலைப் பள்ளி, விராச்சிலை
709. சு.சிவா, ஐந்தாம் வகுப்பு, ஞானாம்பிகா உதவி தொடக்கப் பள்ளி, கருப்பம்புலம்
710. டி.அலமேலுஸ்ரீ, ஐந்தாம் வகுப்பு, சன்பீம் மெட்ரிகுலேஷன் பள்ளி, வேலூர்
711. செ.சபரித்தா, எட்டாம் வகுப்பு, செயின்ட் ஜோஸப் மேல்நிலைப் பள்ளி, கோவை
712. எஸ்.ஸ்வேதா பிரியதர்ஷிணி, ஒன்பதாம் வகுப்பு, இராஜா முத்தையா மெட்ரிக் பள்ளி, கரூர்
713. ப.சுதர்சன், ஏழாம் வகுப்பு, வள்ளியம்மை மெட்ரிகுலேஷன் பள்ளி, திருநெல்வேலி
714. எஸ்.மி.தீபலக்ஷ்மி, மூன்றாம் வகுப்பு, எஸ்.எஸ்.கே.வி. மெட்ரிகுலேஷன் பள்ளி, காஞ்சிபுரம்
715. ஆர்.கே.சேகர், ஒன்பதாம் வகுப்பு, அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, அந்தியூர்
716. தி.க.பா. சந்துரு, மூன்றாம் வகுப்பு, வைரம் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, புதுக்கோட்டை
717. அ.கிருஷ்டினா, எட்டாம் வகுப்பு, பாரத் சீனியர் செகண்டரி பள்ளி, நீலாங்கரை
718. அ.தேவன், மூன்றாம் வகுப்பு, பாரத் சீனியர் செகண்டரி பள்ளி, நீலாங்கரை
719. இ.சிவசங்கரி, ஐந்தாம் வகுப்பு, ஆர்.சி.பள்ளி, கானூர்
720. ஆர்.காயத்ரி, மூன்றாம் வகுப்பு, வள்ளியம்மை மெட்ரிகுலேஷன் பள்ளி, குன்னத்தூர்



721. க.கணேஷ்குமார், ஐந்தாம் வகுப்பு, வள்ளியம்மை மெட்ரிகுலேஷன் பள்ளி, திருநெல்வேலி

722. ரா.சசிக்குமார், பத்தாம் வகுப்பு, காமராஜ் மேல்நிலைப் பள்ளி, நம்பியூர்

723. ஜி.விக்ரம், ஏழாம் வகுப்பு, கே.எஸ்.ஆர். மெட்ரிகுலேஷன் பள்ளி, திருச்செங்கோடு



724. இர. புருஷோத்தமன், பதினொராம் வகுப்பு, ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, ஸ்ரீரங்கம்

725. ச.அஜய், ஐந்தாம் வகுப்பு, லக்ஷ்மி கார்டன் மெட்ரிக் பள்ளி, வேலூர்

726. வ.வினோதா, எட்டாம் வகுப்பு, வித்யோதயா மெட்ரிக் பள்ளி, சென்னை

727. ப. கார்த்திகேயன், எட்டாம் வகுப்பு, சிலுக்குவார்பட்டி

728. மு.அர்விந்த் சண்முகம், ஆறாம் வகுப்பு, லிஸ்யு மேல்நிலைப் பள்ளி, கோவை

729. பா.ஹரிபிரசாத், ஏழாம் வகுப்பு, டி.ஏ.வி. பள்ளி, உள்ளகரம்

730. கே.விக்னேஷ், ஏழாம் வகுப்பு, சாந்தி செண்டினரி வித்யாலயா, ஸ்ரீரங்கம்

731. மோ.உஷாராணி, ஒன்பதாம் வகுப்பு, அரசு நகர் மேல்நிலைப் பள்ளி, அரியலூர்

732. சு.பாரதி, ஒன்பதாம் வகுப்பு, சாலா இந்து பெண்கள் மேல்நிலைப் பள்ளி, திருச்சி

733. அ.வி.அஜிதாபாரதி, ஒன்பதாம் வகுப்பு, ஏ.கே.டி அகாடமி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, கள்ளக்குறிச்சி

734. அ.வி.சூரியதீபன், பத்தாம் வகுப்பு, இ.எஸ்.மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, விழுப்புரம்

735. எஸ்.அனிதா, ஏழாம் வகுப்பு, சிவந்திபட்டி நாடார் மகளிர் உயர்நிலைப் பள்ளி, மம்சாபுரம்

736. ச.பிரதீப், ஐந்தாம் வகுப்பு, ஸ்ரீமதி துர்கா தேவி சௌதிரி விவேகானந்தா வித்யாலயா, சென்னை

737. எஸ்.வர்ஷிணி, ஐந்தாம் வகுப்பு, ஜி.கே.ஷெட்டி ஹிந்து வித்யாலயா, சென்னை

738. ப.ஓவியா, பத்தாம் வகுப்பு, மகாத்மா காந்தி பள்ளி, தென்னூர்

739. ஈ.எஸ்.ஸ்வேதா, இரண்டாம் வகுப்பு, அகிலாண்டேஸ்வரி வித்யாலயா, திருவானைக்கோவில்.

740. சு.ப.ராஜ்குமார், ஆறாம் வகுப்பு, க்ஷத்ரிய நாடார் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, கமுதி

741. சி.பாலமுருகன், ஒன்பதாம் வகுப்பு, அரசு உயர்நிலைப் பள்ளி, சென்னை

742. எம்.திவிஷா, நான்காம் வகுப்பு, ஸ்ரீகலைவாணி மெட்ரிக் பள்ளி, சங்கரன் கோவில்

கோகுலம் சிறுவர் சங்கம் - கூப்பன்

என் பெயர் : ....

வயது : ....

பெற்றோர் பெயர் : ....

வகுப்பு, பள்ளி : ....

: ....

வீட்டு முகவரி : ....

....

....

புகைப்படம்

நான் கோகுலம் சிறுவர் சங்கத்தின் உறுப்பினராகச் சேர விரும்புகிறேன். உங்கள் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்கிறேன்.

(கையொப்பம்)

இதுவரை கோகுலம் சிறுவர் சங்கத்துக்கு கூப்பன் அனுப்பாதவர்கள் உடனே அனுப்புங்கள். உங்கள் நண்பர்களுக்கும் விஷயத்தைச் சொல்லி, அவர்களையும் உறுப்பினராக்குங்கள்!

743. செ.சண்முகப்ரியா, எட்டாம் வகுப்பு, ஸ்ரீ மு.வி.ந.நி.பள்ளி, கம்பம்

744. ச.காயத்ரி, ஒன்பதாம் வகுப்பு, அரசு உயர்நிலைப் பள்ளி, நல்லூர்

745. ப.சந்தியா, நான்காம் வகுப்பு, அரவிந்தர் மெட்ரிக் பள்ளி, கலசபாக்கம்

746. செ.மகேந்திரன், பத்தாம் வகுப்பு, தேவாங்க மேல்நிலைப் பள்ளி, கோவை

747. வளர்மதி, தேசிய வகை தமிழ்ப் பள்ளி, மலேசியா

748. வி.பிரசன்னா, எட்டாம் வகுப்பு, ஸ்பிக் பள்ளி, தூத்துக்குடி

749. வி.எஸ்.கமல், ஒன்பதாம் வகுப்பு, மரியான் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளி, பரங்கிமலை

750. இ.உலகநாயகி, மூன்றாம் வகுப்பு, முத்தமிழ் பள்ளி, காருகுறிச்சி



கிரேட்



ஹலோ, கோகுலம் குட்டீஸ்! நலமா இருக்கீங்களா? நம்முடைய ரத்தம் பார்ப்பதற்கு ஒரே நிறமாக இருந்தாலும் அதில் பல வகைகள் இருக்கறது உங்களுக்கு தெரியுமில்லியா? இந்த ரத்தவகைகளை நமக்குக் கண்டுபிடித்துச் சொன்னவர், **கார்ல் லேண்ட்ஸ்டீனர்.**

இவர் ஆஸ்திரியா நாட்டைச் சேர்ந்த மருத்துவர். 'வியன்னா'வில் 1868ஆம் ஆண்டு ஜூன் 14ஆம் நாள் பிறந்தார். வியன்னா பல்கலைக்கழகத்தில் 1891ஆம் ஆண்டில் டாக்டர் பட்டம் பெற்றார். இவர் மாணவராக இருந்தபோதே பல ஆராய்ச்சிகளில் ஈடுபட்டார். குறிப்பாக ரத்தம் எவ்வாறு உருவாகிறது? உணவுக்கும் ரத்த அணுக்களின் வளர்ச்சிக்கும் என்ன தொடர்பு போன்றவற்றைக் கண்டுபிடித்தார். அதற்குப் பிறகு தமது ஆராய்ச்சிகளை மேம்படுத்துவதற்காக ஜூரிச், மூனிச் போன்ற பல்கலைக்கழகங்களில் ஐந்து ஆண்டுகள் சிறப்புப் பயிற்சிகளைப் பெற்று மீண்டும் வியன்னாவுக்கே திரும்பினார்.

ஒருவர் விபத்தினாலோ, நோயினாலோ ரத்தம் இழக்கையில் அந்த ரத்த இழப்பை ஈடுகட்ட வேறு ஒருவருடைய ரத்தத்தைச் செலுத்தும் முறை அந்த நாளில் கண்டுபிடிக்கப்படவில்லை. இதனால் மிகுதியாக ஒருவர் ரத்தம் இழப்பாராயின் அவருக்கு மரணம் உறுதி என்ற நிலைமைதான் இருந்தது.

முதன்முதலில் இங்கிலாந்து மருத்துவர் 'ஜேம்ஸ் பிலண்டல்' என்பவர், பிரசவத்தின்போது மிகுதியாக ரத்தம் இழந்த ஒரு பெண்ணுக்கு வேறு ஒருவரின் ரத்தத்தைச் செலுத்தி வெற்றி கண்டார். ஆனால் இந்த வெற்றி நிரந்தரமாக நீடிக்கவில்லை. ஏனெனில் இதுபோல அவர் அடுத்த முறை ஒருவருக்கு ரத்தம் செலுத்தும்போது அந்த நோயாளி இறந்துவிட்டார். ஆனால் அதற்குக் காரணம் தெரியவில்லை.

இவ்வாறு ரத்தம் செலுத்தும் முறையில் நோயாளிக்கு உயிரிழப்பு ஏற்பட வாய்ப்பு இருந்த காரணத்தால், மருத்துவர்கள் ரத்தம் மாற்றுவதற்குத் தயங்கினர். இந்த நிலைமைக்கு ஒரு தீர்வு காண முயன்றார், லேண்ட்ஸ்டீனர்.

அது 1900ம் ஆண்டு. லேண்ட்ஸ்





லேண்ட்ஸ்டீனர்!

டீனர் தமது ஆராய்சிக்கூடத்தில் ரத்த அணுக்களை பகுத்து நுண்ணோக்கியில் பார்த்துக் கொண்டிருந்தபோது, ஓரிடத்தில் இருந்த ரத்த அணுக்கள் மட்டும் வழக்கம்போல் தனித்தனியாக இல்லாமல் சற்று மாறுதலாக குவியல் குவியலாகக் காணப்பட்டன. இதற்கு என்ன காரணம் என்று அறிந்துகொள்ள தமது ஆராய்ச்சிகளைத் தீவிரப்படுத்தினார்.

அப்போதுதான் அவருக்கு மனித ரத்தத்தில் பல வகைகள் உள்ளன என்பதும், அந்த ரத்த வகையை நிர்ணயிப்பது ரத்த சிவப்பணுக்களின் மேல் மட்டங்களில் இருக்கும் 'ஆண்டிஜன்' எனும் மூலக்கூறு என்பதும் தெரிய வந்தது. இந்த 'ஆண்டிஜன்' என்பது உடலுக்கு நோய் எதிர்ப்பு சக்தியைத் தரக்கூடிய பண்பைப் பெற்றிருக்கிறது என்றும் அது பரம்பரை பரம்பரையாக வருகிறது என்பதையும் அவர் தெரிந்துகொண்டார்.

இந்த மூலக்கூறு ஒரே மாதிரியாக இருக்குமானால் ரத்த அணுக்கள் ஒற்றுமையுடன் இருக்கும். இந்த மூலக்கூறுகள் மாறினால் ரத்த அணுக்கள் ஒன்றோடொன்று சண்டை போட்டு ஒரு போர்க்களத்தில் காணப்படும் பிணக் குவியல் போல் குவியல் குவியலாக மாறிவிடும். இதன் விளைவாக ரத்தம் உடலில் பயணிக்க முடியாமல் மனிதருக்கு மரணம் நிகழும் என்று அறிவித்தார்.

அதன்பின்பு தம்முடைய ரத்தத்தை எடுத்து மற்ற ஐந்து பேருடைய ரத்தத்துடன்

கலந்து பார்த்தார். அதில் வேறு சில உண்மைகள் தெரிந்தன. அதாவது ரத்தத்தில் இருக்கும் இந்த ஆண்டிஜனில் 'A', 'B' என்று இரண்டு வகை உண்டு என்று தெரிந்தது. இதை அடிப்படையாகக் கொண்டு அவர் இரத்த வகைகளைக் கணித்தார்.

ஒருவருடைய ரத்தத்தில் 'A' ஆண்டிஜன் இருந்தால் அவருடைய ரத்த வகை 'A'. 'B' ஆண்டிஜன் இருந்தால் அவருடைய ரத்த வகை 'B'. சிலருக்கு இந்த இரண்டு ஆண்டிஜன்களும் இல் லாமலும் இருந்தன. அப்படிப்பட்டவர் களுக்கு 'O' ரத்தவகை (அதாவது ஜீரோ) எனப் பெயரிட்டார். இப்படி முதன்முதலில் லேண்ட்ஸ்டீனர் கண்டுபிடித்தது மொத்தம் மூன்று வகை ரத்தம் மட்டுமே.

சரியாக ஓராண்டு கழிந்த பின்னர், ரத்தத்தில் மேலும் ஒரு வகை உள்ளது என்று கண்டுபிடித்தார். இதன்படி சில ருக்கு ரத்தத்தில் 'A', 'B' இரண்டு ஆண்டிஜன்களும் இருக்கின்றன. அந்த ரத்த வகைக்கு 'AB' வகை எனப் பெயரிட்டார். ஆக மொத்தம் ரத்தவகை நான்கு என முடிவு செய்தார். இதை மருத்துவ உலகமும் ஏற்றுக்கொண்டது.

'A' வகை ரத்தம் உள்ளவர்களுக்கு அதே ரத்த வகையைச் செலுத்தினால் உடல் ஏற்றுக்கொள்ளும்., 'B' வகை ரத்தம் உள்ளவர்களுக்கு அதே ரத்த வகை



மனித ரத்தத்தில் பல வகைகள் உள்ளன என்பதும் அந்த வகையை நிர்ணயிப்பது சிவப்பணுக்களில் இருக்கும் ஆண்டிஜன் என்பதும் தெரியவந்தது.


மருத்துவ மேதைகள் :

மைக்கேல் டீபெக்கே



'நவீன இதய அறுவைத் துறையின் தந்தை' என்று போற்றப்படுபவர் 'மைக்கேல் எல்லிஸ் டீபெக்கே'. இவர் 1908ஆம் ஆண்டு செப்டம்பர் 7ல் லெபனானில் 'லேக் சார்லஸ் லா' எனும் ஊரில் பிறந்தார். 'டுலேன் பல்கலைக் கழகத்தில் மருத்துவப் பட்டம் பெற்றார். பிறகு ஐரோப்பாவிற்குச் சென்று இதய அறுவைச் சிகிச்சைத் துறையில் நிபுணத்துவம் பெற்றார். குறிப்பாக மாரடைப்பு வந்தவர்களுக்கு மீண்டும் உயிர் தருகின்ற 'பைபாஸ் ஆபரேசனை' உலகில் முதன் முதலில் செய்து காண்பித்தவர் இவரே! இதன் மூலம் பல்லாயிரக் கணக்கான இதய நோயாளிகளுக்கு மறுவாழ்வு அளித்தார். இதயத்தைப் பிளந்து செய்யப்படும் அறுவைச் சிகிச்சைக்குத் தேவையான 'ரோலர் பம்ப்'

ஒத்துக்கொள்ளும். 'AB' வகை உள்ளவர்களுக்கு எந்த ரத்தமும் சேரும். 'O' வகை ரத்தம் உள்ளவர்களுக்கு அதே ரத்த வகைதான் சேரும். ஆனால் இவர்கள் மட்டும் மற்ற ரத்த வகை உள்ளவர்களுக்கும் ரத்தம் தரலாம். இவ்வாறு ரத்த மாற்று முறையால் பல உயிர்களைக் காப்பாற்றவும் வழி பிறந்தது. இந்த மகத்தான கண்டுபிடிப்புக்கு லேண்ட்ஸ்டீனர் 1930ல் நோபல் பரிசு பெற்றார்.




என்றாலும் ஒரு சிலருக்கு இவ்வாறு ரத்தம் செலுத்தும்போது உடலில் சில பாதிப்புகள் தோன்றின. அதற்கு என்ன காரணம் என்று அறிந்து கொள்ள லேண்ட்ஸ்டீனர் தமது ஆராய்ச்சியைத் தீவிரப்படுத்தினார். இப்போது இவருடன் 'வியன்னர்' என்ற ஆராய்ச்சியாளரும் சேர்ந்து கொண்டார். சரியாக 40 ஆண்டுகள் கழித்து, அதாவது 1940ம் ஆண்டில் அதற்குக் காரணம் தெரிந்தது. ரத்த சிவப்பணுக்களின் மேல் மட்டங்களில் 'Rh' என்று ஒரு சிறப்பு வகை ஆண்டிஜன் இருக்கிறது என்று கண்டு பிடித்தார். இந்தக் கண்டுபிடிப்பை முதன்முதலில் 'ரீசஸ்' (Rhesus Monkey) எனும் மனிதக் குரங்கில் கண்டுபிடித்த காரணத்தால் அதற்கு 'Rh' என்று பெயரிட்டார். ஆக ஒருவருக்கு ரத்த வகை என்ன என்பதும், அது 'Rh' பாசிட்டிவா, நெகட்டிவா என்பதும் தெரிந்திருந்தால் ரத்த வகை உறுதியாகிவிடும்.

சரி குட்டீஸ், உங்கள் ரத்த வகை உங்களுக்குத் தெரியுமா? அவசியம் தெரிஞ்சுக்கணும். அவசரகால ஆபத்துக்கு அது உதவும். இனி அடுத்த மாதம் இன்னொரு புதிய கண்டுபிடிப்பு பற்றி தெரிஞ்சுக்குவோம். பை!

●



எனும் கருவியை இவரே உருவாக்கினார். இவரது தாய் தையல் கலையில் வல்லுநர். அவரிடமிருந்து கற்ற பாடத்தால், தமனி இரத்தக் குழாயின் பாதிப்படைந்த பகுதிகளை 'கிராப்டிங்' முறையில் ஒட்டி, தைத்து சரி செய்யும் முறையைக் கண்டறிந்தார். மேலும் இரத்தக் குழாய்களை அடைக்கின்ற இரத்த உறைவுக் கட்டிகளை அறுவைச் சிகிச்சை மூலம் அகற்றும் கலையை இவர்தான் முதன் முதலில் கண்டறிந்தார். இதன்மூலம் பக்கவாதம் வருவதைத் தடுத்து பல நோயாளிகளைக் காப்பாற்றினார். 1966ல் ஒரு பகுதி செயற்கை இதயத்தைக் கண்டுபிடித்தார். இதய அறைகளில் இரத்தக் போக்குவரத்தை அதிகரிப்பதற்காக 'வெண்ட்ரிகுலர் அசிஸ்ட் டிவைஸ்' எனும் கருவியைக் கண்டுபிடித்தவரும் இவரே! கடந்த ஜூலை 11ஆம் நாள் இவர் மரணமடைந்தார்.


வாழை
பேசுகிறேன்!

நெடுங்கவிதை

வாழை என்னை வளர்ப்பதற்கு
வசதி அதிகம் தேவையில்லை
ஏழை எளியோர் வீட்டினிலும்
எழும்பு வதற்கோ தடையில்லை

கொல்லைப் புறமாய் ஓரத்தில்
குப்பை கொட்டி வளர்த்தாலும்
கொள்ளை இன்பம் கொண்டங்கே
கூட்ட மாக வாழ்ந்திடுவேன்

வீணாய்ப் போகும் நீரையெல்லாம்
வீதியில் விட்டு சாக்கடையாய்
பேணா திருக்கும் காரணத்தால்
பெரிதாய் நோயும் தான் பரவும்

கொல்லையில் நீரைக் கொண்டு வந்து
குடிக்க எனக்குத் தந்துவிட்டால்
எல்லை இல்லா மகிழ்வோடு
இலைகள் விட்டு வளர்ந்திடுவேன்.

பூக்கள் தொடுக்க நாராவேன்
பூவை சமைக்க நான் தருவேன்
மாக்கள் போல நாணின்றி
மரமாய் அனைத்தும் பயன் தருவேன்


வாழைத் தண்டை தந்திடுவேன்
விழாவில் முன்னர் வரவேற்பேன்
ஏழை வீட்டுத் தோழனென
என்றும் இருந்து நான் மகிழ்வேன்

தட்டாய்இலையைத் தந்திடுவேன்
தானே விரும்பி பழம் தருவேன்
விட்டுப் போவேன் என் உறவை
வாழைக் கன்றாய் வேர்மீதே!

இலை, காய், பழம், நார், தண்டுகளும்
இப்படி எல்லாம் தந்திடுவேன்
கிளையே இல்லா புல்லாக
கிளைத்து வளர்வேன் வேரினிலே

புதுவைத் தமிழ் நெஞ்சன்





மேஜிக்கின் உத்திகள்:
உருவாக்குதல், மறைந்து போக வைத்தல், மற்றொன்றாக மாற்றுதல், மறுபடி

மேஜிக்

'மாயமில்ல! மந்திரமில்ல. எல்லாம் தந்திரம் தான்' என உணர்த்தும் கலை மேஜிக். இதையே 'மேஜிக் டிரிக்ஸ்' என்கின்றனர். நாம் விழி திறந்து வைத்திருக்கின்றபோதே, விந்தை புரிந்து நம்மை வியப்பில் ஆழ்த்துகின்ற கலைதான் மேஜிக்.

ஒருவரிடம் வேடிக்கையாக ஒரு கேள்வி கேட்கப்பட்டது. உலகிலேயே நிகழ்த்தப்பட்ட முதல் மேஜிக், அதாவது தந்திரக் காட்சி என்ன தெரியுமா? கொஞ்சம் யோசித்த அவர், "ஆதிகாலத்தில் மனிதன் உண்டாக்கிய நெருப்புதான்" என்றார். கற்களைக் கொண்டு உரசி நெருப்பை வரவழைத்த முதல் மனிதனை மேஜிக் மேன் என அழைக்கலாம். ஏன் என்றால் அனைவரும் வியப்பாகப் பார்க்கின்ற போது, தேவைப்படும் பொழுதெல்லாம் நெருப்பை வரவழைத்த முதல் மனிதன் சூப்பர் மேஜிக் மேன் தான்.

மேஜிக் என்னும் சொல் பழைய பெர்சிய மொழிச் சொல்லான 'மேகி' என்பதிலிருந்து உருவானது. இதையே இலத்தீன் மொழிச் சொல்லான மேகியஸ், கிரேக்க மொழிச் சொல்லான மேகி கோஸ் என்பதிலிருந்து உருவானது என்றும் கூறப்படுகிறது. பதினெட்டாம் நூற்





உருவாக்கல், இடம் பெயர்தல், மிதத்தல், நுழைதல், உள்ளது உரைத்தல் என்று பல!






நாண்டிலிருந்து மேஜிக் டிரிக்ஸ் என்பது தனித் துறையாக வளரத் தொடங்கியது.

'ஜேக்கப் பிலடெல்பியா' என்பர் 1756 முதல் 1781 வரை ஐரோப்பாவின் அனைத்து நாடுகளிலும் ரஷ்யாவிலும் மேஜிக் தந்திரக் காட்சிகளைச் செய்து காட்டினார். இவை பெரும்பாலும் அறிவியல் கண்காட்சிகளின் போதுதான் நடைபெற்றது. தொடக்க காலத்தில் குழந்தைகளை மகிழ்விக்கவே மேஜிக் ஷோக்கள் நடைபெற்றன.

'டோவ் ஹெனின்' என்பவர்தான் மேஜிக் முறைகளை மாற்றி அமைத்தவர். சிறுவர்களை மட்டுமே கவர்ந்திழுத்த மேஜிக்கை, அரங்கக் காட்சிகளாகப் பல்லாயிரக்கணக்கானோர் முன்னிலையில் செய்யும் காட்சிகளாக வடிவமைத்தார். பழைய முறைகளை மாற்றிவிட்டுத் தொலைக்காட்சித் தொடர்களாகவும் செய்து காட்டினார்.

மேஜிக்கில் பல்வேறு உத்திகள் பின்பற்றப்படுகின்றது. முதலாவது உருவாக்குதல். அதாவது காலியான பாக்கெட்டில் இருந்து பூனையைக் கொண்டு வருதல். அல்லது காற்றில் இருந்து விசிறியை வரவைத்தல்.

அடுத்த உத்தி மறைந்து போக வைத்தல். இருக்கின்ற பொருளை இல்லாமல் செய்வது. சில்லறைக் காசுகளை மறைத்தல், காரை மறைத்தல், யானையை மறைத்தல்.





மன்னர்கள்!

சிலையை மறைத்தல். இப்படியே மேஜிக் நிபுணர்கள் எந்தப் பொருளையும் மேடையில் இருந்து மறைத்து விடுகின்றனர்.

இன்னொரு உத்தி 'மற்றொன்றாக மாற்றுதல்'. அதாவது ஒரு புலியைக் காட்டிவிட்டு, பின்னர் அதை பூனையாகக் காட்டுதல். கைக்குட்டைகளின் நிறங்களை மாற்றிக் காட்டுதல் இப்படிப் பல காட்சிகளை நாமே மேடையில் கண்டு ரசித்திருப்போம்.

'மறுபடி உருவாக்கல்' அதாவது கயிறைத் துண்டு துண்டாக வெட்டி, மீண்டும் அதை முழுக்கயிறாகக் காட்டுதல், துண்டிக்கப்பட்ட பெண்ணின் தலையை மீண்டும் ஒட்டிக் காட்டுதல், இப்படியான காட்சிகள்.

'இடம் பெயர்தல்' இந்த உத்தியைக் கண்கட்டு வித்தை என்றும் கூறலாம். ஒரு இடத்தில் ஒரு பொருளை வைத்து விட்டு, அதை வேறு இடத்தில் இருந்து வெளியே எடுத்து வருதல். ஒரு முனை யில் வைக்கப்பட்ட பந்தை, அடுத்த முனையில் போய் எடுத்து வருதல்.

'மிதத்தல்' இது பிரம்மிப்பூட்டும் காட்சி ஆகும். ஒரு மனிதனைப் படுக்க வைத்து, அவனை அந்தரத்தில் மிதக்க விடுவது... இப்படிப் பல ரகம்.

'நுழைதல்' இது நுட்பமான முறைகளைக் கொண்டது. கண்ணாடிக்குள் மனிதனைக் கடந்து போக வைப்பது; கண்ணாடி உடையாது. கூடைக்குள் இருக்கும் மனிதனின் உடலுக்குள் கத்தியைப் பாய்ச்சுவது.



அப்பப்பா...

இவை அனைத்தையும் விட காட்சியில் மிக மிக அதிசயிக்க வைப்பது 'உள்ளது உரைத்தல்' ஆகும். நம் சட்டைப் பையில் இருக்கும் காசுகளின் எண்ணிக்கையை உரைத்தல். சீட்டுக்கட்டில் உள்ள சீட்டின் பெயரைச் சரியாகச் சொல்லுதல். இது உள்ளபடியே மிகவும் அதிசயம் ஆகும்.



உலகைக் கலக்கிய மேஜிக் நிபுணர்கள்

ஜேக்கப் அவர்களுக்குப் பின்னால், உலகைத் தன்னுடைய மேஜிக் கலையால் திரும்பிப் பார்க்க வைத்தவர் 'ஜீன் யூஜின் ராபர்ட் ஹூடின்' ஆவார். இவரின் காலம் 1805 - 1871. இவர் 1840ஆம் ஆண்டில் பிரான்சு நாட்டுப் பாரீஸில் 'மேஜிக் தியேட்டர்' ஒன்றை உருவாக்கினார். 1873இல் இலண்டனில் 'ஜே என் மேஸ் கீலின்' மற்றும் 'குக்கி' ஆகியோருடன் இணைந்து அரங்க மேஜிக் காட்சிகளை வழங்கினார். பொருட்களைத் திடீரென மறைய வைப்பது இவர்களின் சிறப்பாகும். ஹங்கேரியில் பிறந்த மேஜிக் நிபுணர் 'ஹாரி ஹூடினி'. இவர் அமெரிக்காவில் தன்னுடைய மேஜிக் காட்சிகளால் புகழ் பெற்றார். இவரின் 'மிரர் எஸ்கேப்' 'மில்க் கேன் மேஜிக்' போன்றவை புகழ் பெற்றவையாகும்.

'டேவிட் பிளய்னி' புகழ்பெற்ற மேஜிக் மேன். இவரின் தொலைக்காட்சித் தொடரான 'புராசன் இன் டைம்' புகழ் பெற்றது. அமெரிக்காவைச் சேர்ந்த 'பென் அண்ட் டெல்லர்', 'கிரிஸ் ஏஞ்சல்' போன்றோர் தங்கள் மேஜிக் திறமையால் புகழ் பெற்றவர்கள்.

உலகமெங்கும் ஆண்டுக்கு 500 ஷோக்களுக்கு மேல் நடத்திப் புகழ்பெற்றவர் 'டேவிட் காப்பர் பீல்டு'. இவர் கதை சொல்லும் கலையிலும் வல்லவர். 2003ஆம் ஆண்டின் இவரது வருமானம் 57 மில்லியன் டாலர்கள். உலகைக் கலக்கிய மேஜிக் நிபுணர்கள் வரிசையில் இடம் பெற்றிருக்கும் இந்தியர் 'பி.சி. சர்க்கார்'. இவரின் புகழ்பெற்ற மேஜிக் வடிவம் 'இந்திரஜால்' ஆகும். 1930 முதல் 1960ஆம் ஆண்டு வரை தன் மேஜிக் திறமையால் உலகை வலம் வந்தார்.

இந்திய மேஜிக் நிபுணர்கள்

புகழ்பெற்ற இந்திய மேஜிக் நிபுணர்களில் ஒருவர் 'வாழக்குன்னம் நீலகண்டன் நம்பூதிரி'. இவரைக் கேரள மேஜிக்கின் தாத்தா என அழைக்கின்றனர்.





மேஜிக் என்னும் சொல், பழைய பெர்சிய மொழியில் மேகி என்னும் சொல்லிலிருந்து உருவானது

இவரின் புகழ்பெற்ற மேஜிக் வடிவங்கள் 'கப்புகளும் பந்துகளும்' ஆகும். அதன் பின்பு 'புல்லட்' தந்திரக் காட்சிகளை மேடையேற்றினார்.


தென்னிந்தியாவில் புகழ்பெற்ற மேஜிக் கலை நிபுணர் பேரா கே.பாக்யநாத். 'தென்னிந்தியாவின் மிகப்பெரிய மேஜிக் நிகழ்ச்சி' என இவரின் நிகழ்ச்சி வர்ணிக்கப்படுகிறது.


இந்திய மேஜிக் கலையை உலகறியச் செய்தவர் பெருமை பி.சி. சர்க்கார் (சீனியர்). இவர் 'இந்திய நவீன மேஜிக்கின் தந்தை' என அழைக்கப்படுகிறார். இவரின் புகழ்பெற்ற வாசகம் "நான் தூங்கும்போது மேஜிக்கையே சுவாசிக்கிறேன். விழித்திருக்கும்போது மேஜிக் வேலையையே செய்கிறேன்" என்பதாகும். மேஜிக் கயிறு, பறக்கும் கம்பளி, எக்ஸ்ரே-கண்கள் போன்றவை இவருடைய மேஜிக்கில் சிறப்பானவை. மேஜிக் தொடர்பாக 22க்கும் மேற்பட்ட புத்தகங்கள் எழுதியுள்ளார். அண்மையில் புகழ் பெற்றுவரும் இந்திய மேஜிக் நிபுணர்கள் பி.சி. சர்க்கார் (ஜூனியர்), கோபிநாத் முத்துகாட், பி.எம். மித்ரா, மேஜிசியன் பிலிப், மேஜிசியன் சாம்ராஜ், பிரகலாத் ஆச்சாரியா, அசோக் பண்டாரி, உகேஷ் சர்க்கார், மேஜிக் லியோ, பி.ஆர். ஆகாஷ், சாகர் சர்மா போன்றோர். குறிப்பிடத் தக்கவர்கள்.

மேஜிக்கில் நாடு, மதம், இனம், தமிழ் என்றெல்லாம் பேதமில்லை. உற்சாகமும் சந்தோஷமும் மட்டும்தான் அனைவரையும் கட்டிப் போடுகிறது. ●



தமாஷ் ராமா
கதை, படம் : வீரமுடி
குரங்கை வித்தை செய்ய வைத்து வாழ்பவன் குப்பன். அதுதான் அவன் தொழில். ஒரு நாள்...
ஆடுடா ராமா
வித்தை முடிந்ததும் பலரும் காசு போட்டார்கள். ஒருவர் நூறு ரூபாய் கொடுத்தார்.
ராமா... இன்னிக்கு அதிர்ஷ்டம். நூறு ரூபாய் கிடைச்சிருக்கு. வா வீட்டுக்குப் போகலாம்.
காட்டுப் பாதையில் நடந்தான் குப்பன்.
எதிரே ஒரு முரடன்...
டேய்... கைல இருக்கற பணத்தைக் கொடு. இல்ல...


ஐயா, இந்தப் பணத்தை கொண்டு போனாத்தான் என் புள்ளைகளுக்கு சாப்பாடு!
முரடன் கோபமாய் குத்தினான்.
ஆ
குப்பன் விழ, குரங்கு ஓடியது. எதிரே போலீஸ் ஜீப்...
குரங்கு கையசைப்பதை யோசனையுடன் பார்த்த இன்ஸ்பெக்டர்...
யாருக்கோ ஆபத்து!
குப்பன் விழுந்து கிடந்த இடத்தை அடைந்தனர்.
கத்தியால குத்தியிருக்கு. ஆஸ்பத்திரிக்கு கொண்டு போவோம்.
ஆஸ்பத்திரியில டாக்டர்...
சரியான நேரத்துல கொண்டு வந்தீங்க.


நாங்க காப்பாத்தல டாக்டர். ஒரு குரங்குதான்.
என்னது குரங்கா?
ஆஸ்பத்திரி முழுதும் தேடினார்கள். குரங்கைக் காணவில்லை.
அதெப்படி சார் காணாமல் போச்சு?
திரும்ப வரும் வா, நாம போகலாம்.
அதே சமயம்... காட்டுப் பாதையில் அந்த திருடனின் கதி...
அப்போது அங்கு போலீஸ் வந்தது.
அட... நாம தேடற கொலைகார கொம்பன்.
கொம்பனின் தலைக்கு அரசு ஒரு லட்சம் ரூபாய் பரிசு அறிவித்து இருந்தது. அதை குப்பனிடம் அளித்த இன்ஸ்பெக்டர்...
குப்பா.... நீ அதிர்ஷ்டக்காரன்.
இனிமே வித்தை காட்ட வேண்டாம். ஏதாவது தொழில் செய்...
என் குரங்கையும் நல்லா பாத்துப்பேன்.
முற்றும்

சிறுகதைப் போட்டி



வள்ளியப்பா இலக்கிய வட்டம், செல்லப்பா - செல்லப்பன் அறக்கட்டளையுடன் இணைந்து நடத்தும் சிறுவர் சிறுகதைப் போட்டி

பரிசுத் தொகை ரூ.1,500/-


குழந்தை இலக்கியத்தை வளர்க்கும் முனைப்பில் வள்ளியப்பா இலக்கிய வட்டம் நடத்தும் இந்தப் போட்டியில் கலந்துகொள்ள வயது வரம்பு இல்லை. பள்ளி, கல்லூரி மாணவர்களும் கலந்து கொள்ளலாம்.

* கதைகள் நான்கு பக்கங்களுக்குமேல் இருக்கக் கூடாது.
* பதினான்கு வயதுக்கு உட்பட்ட சிறுவர்களுக்கு ஏற்றதாக கதை இருக்க வேண்டும்.
* தேர்வு பெறாதவற்றை திருப்பி அனுப்ப இயலாது.
* முதல் பரிசு ரூ.300/- இரண்டாம் பரிசு ரூ.200/- மூன்றாம் பரிசு ரூ.100/- ஆறுதல் பரிசு 18 கதைகளுக்கு ரூ.50/-

கடைசி தேதி : 15.11.2008

முகவரி : **வள்ளியப்பா இலக்கிய வட்டம், 1, பாரதி பூங்கா, நான்காம் குறுக்குச் சாலை, சாய்பாபா காலனி, கோவை - 641 011.** தொலைபேசி : 0422-2444126, 2549711

விஞ்ஞானக் களஞ்சியம்



ஆசிரியர் : **சுனிதா பூபாலன்,** வெளியீடு : ஸ்ரீ.ஐஸ்வர்யா பப்ளிகேஷன், 40/16, பெருமாள் செட்டித் தெரு, ஆரணிப் பாளையம், ஆரணி - 623 301. விலை ரூ.45/-


நாம் பயன்படுத்தும் பேனாவில் இருந்து, மின் விளக்கு, டயர், தொலைபேசி, பென்சில் என்று பல்வேறு பொருட்களையும், அதைக் கண்டறிந்தவர்கள் பற்றியும் சுருக்கமாக அறிமுகப்படுத்தும் நூல். குறிப்பாக, மாணவர்களுக்கு பொது அறிவை வளர்த்துக் கொள்ள உதவும் பயனுள்ள புத்தகம்!

படிச்சீங்களா?

நடுக்கடல் நாசகாரன்

நூல் ஆசிரியர்கள் : **ரமேஷ் வைத்யா - முத்து,** வெளியீடு : விகடன் பிரசுரம், 757, அண்ணாசாலை, சென்னை - 22. விலை ரூ.65/-

காமிக்ஸ் என்கிற படக்கதை வடிவம் சிறுவர்களை மட்டுமல்ல; பெரியவர்களையும் கவர்ந்திழுப்பது. தமிழில் இந்த காமிக்ஸ் வடிவத்தை சுவைபட முயன்றிருக்கிறார்கள் இருவரும். இன்னமும் மெருகேற்றப்பட வேண்டும் என்றாலும், பாராட்டத்தகுந்த முயற்சி.




- ராகுல்

ஹரியானா என்ற பெயரில் தனி மாநிலமாக விளங்கும் நிலப்பகுதி முன்பு பஞ்சாபின் ஒரு பகுதியாக இருந்தது. ஆனாலும், இந்தியாவின் பண்டைய சரித்திரத்தில் இடம்பெற்ற முக்கியமான பகுதி இது. ''மிகவும் பசுமையான மண்'' என்ற பொருள் கொண்ட ஹரியானாவின் நிலப்பகுதிகள் யமுனை நதியினால் வளப் படுத்தப்பட்டுகின்றன. ஹரியானா என்பதை ஹரி-ஆனா அதாவது 'இறைவன் வந்து தங்கி இருக்கும் இடம்' என்று பொருள் கொள்வாருமுண்டு. ஆரியர்கள் என்ற பெயரிலிருந்து வந்ததுதான் ஹரியானா என்று ஒரு கருத்தும் சொல்லப்படுகிறது.

மகாபாரத காலத்தில் இருந்தே ஹரி யானாவுக்கு முக்கியத்துவம் இருந்து வரு கிறது. பண்டைய காலத்தில் ஓடி, பூமியை வளப்படுத்தி, பின்னர் பூமிக்கு அடியில் மறைந்துவிட்ட சரஸ்வதி நதி இந்தப் பகுதியில்தான் ஓடியது என்றும், அந்த சரஸ்வதி நதிக் கரையில்தான் ரிக் வேதம் உருவானது என்றும் சொல்லப்படுகிறது. மகாபாரத்தத்தில் வரும் குருக்ஷேத்திரம் தற்போதைய ஹரியானா மாநிலத்தின் பகுதியாக இருந்தது என்றும் சொல் கிறார்கள். மகாபாரதத்தில் ஹரியானா, 'பகுதான்யக' (தானியங்கள் பெருமளவில் விளைந்த) என்றும் 'பகுதன' (செல்வச் செழிப்பான) என்றும் குறிப்பிடப்படுகிறது. இங்குள்ள 'குருக்ஷேத்திரம்' என்ற இடத்தில் தான் பதினெட்டு நாட்கள் பாரதப் போர் நடைபெற்றது என்றும் சொல்லப்படுகிறது. இன்றைய 'ஹிசார்' பகுதிதான் அன்றைய மகாபாரதத்தின் ஹஸ்தினாபுரம் என்றும் சொல்கிறார்கள். இங்கே உள்ள பானிப்பட் டில் நடந்த மூன்று போர்கள் இந்திய வரலாற்றில் மிகவும் முக்கியத்துவம்

குருக்ஷேத்திர



வாய்ந்தவை. பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில், பஞ்சாப் மாகாணத்தின் ஒரு பகுதியாக இருந்தது ஹரியானா. 1966 நவம்பர் முதல் தேதி பஞ்சாபிலிருந்து பிரிக்கப்பட்டு ஹரியானா தனி மாநிலமாக உருவானது.

கிழக்கில் உத்திரப்பிரதேசம், மேற்கில் பஞ்சாப், வடக்கே ஹிமாசலப் பிரதேசம், தெற்கே ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களால் சூழப்பட்ட மாநிலம் ஹரியானா. இந்தியாவின் தலைநகரமான டெல்லியை மூன்று பக்கங்களில் ஹரியானா மாநிலம் சூழ்ந்துள்ளது. இங்கு கோடை, குளிர்காலம், மழைக்காலம் என்று மூன்று விதமான பருவ காலங்கள் நிலவுகின்றன. கோடை கடுமையாகவும், குளிர்காலம் மிதமான குளிராகவும் இருக்கும். ஜூலை முதல் செப்டம்பர் வரை பருவ மழைக்காலம்.



கௌதம்ராம்

இந்திய நாடு... - 10

ஹரியானாவில் மொத்தம் இருபது மாவட்டங்கள் உள்ளன. பெரியதும், சிறியதுமாக 80 நகரங்களும், சுமார் 6750 கிராமங்களும் கொண்ட இந்த மாநிலத்தின் மக்கள் தொகை 2 கோடியே 12 லட்சமாகும். இங்கு ஆயிரம் ஆண்களுக்கு 861 பெண்கள் என்ற விகிதம் நிலவுகிறது. ஹரியானாவில் வாழும் மக்களில் ஜைன மதத்தினரது எண்ணிக்கை கணிசமாக உள்ளது. மாநிலத்தின் கல்வி அறிவு பெற்றவர்கள் 68சதவிகிதம். சட்ட மன்றத்தின் உறுப்பினர்களின் எண்ணிக்கை 90. இங்கிருந்து பாராளுமன்ற லோக்சபாவுக்கு பத்து எம்.பி.க்கள் தேர்ந்தெடுத்து அனுப்பி வைக்கப்படு

பூமி!





கிறார்கள். ராஜ்ய சபா உறுப்பினர்கள் எண்ணிக்கை ஐந்து.

மாநிலத்தில் முக்கியத் தொழில் விவசாயம். 75 சதவிகிதம் மக்கள் விவசாயத்தையே சார்ந்துள்ளனர். நெல், கோதுமை, கரும்பு, பருத்தி, உருளைக்கிழங்கு, பார்லி, கம்பு, சோளம், பருப்பு வகைகள், எண்ணெய் வித்துக்கள் போன்றவை முக்கிய விளைபொருட்கள். அண்மைக் காலமாக கரும்பு, பருத்தி, எண்ணெய் வித்துக்கள், சூரியகாந்தி, சோயா, காய்கறிகள், மற்றும் பழங்களின் உற்பத்திக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. சட்லெஜ் கால்வாய், பக்ரா கால்வாய், யமுனா கால்வாய், பியாஸ் கால்வாய் என்ற பல நீர்ப் பாசனத் திட்டங்களால் ஹரியாணா பெரிய அளவில் பயன்பெற்று வருகிறது. நீர்வளம் குறைந்த பகுதிகளில் சொட்டு நீர் பாசனம் போன்ற சிக்கனமான பாசன முறைகள் கடைபிடிக்கப்படுகின்றன. இந்தியாவிலேயே, அனைத்து கிராமங்களுக்கும் மின்சார வசதி அளித்த முதல் மாநிலம் என்ற பெருமைக்கு உரியது ஹரியானா. இது 1970ஆம் ஆண்டிலேயே சாதிக்கப்பட்டது.

பெரியதும், சிறியதுமாக ஆயிரக்கணக்கான தொழிற்சாலைகள் கொண்டுள்ள ஹரியானா, பயணிகள் கார், விவசாய டிராக்டர், சைக்கிள் மற்றும் மோட்டார் சைக்கிள், ரெஃப்ரெஜிரேட்டர் போன்றவற்றின் உற்பத்தியில் முன்னணி மாநிலமாகத் திகழ்கிறது. மிக அதிகமாக பாசுமதி அரிசி ஏற்றுமதி செய்யும் மாநிலமும் இதுவே. பானிப்பட்டில் தயாரிக்கப்படும் ஊறுகாயும், கைத்தறி மற்றும் தரை விரிப்புகளும் உலகப் புகழ் பெற்றவை.

ஹரியானாவில் இருநூறுக்கும் அதிகமான கல்லூரிகளும், நான்கு பல்கலைக் கழகங்களும் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் குருக்ஷேத்திரா தொழில் நுட்பப் பல்கலைக் கழகமும், இந்தியாவின் முன்னாள் பிரதமர் சரண் சிங் பெயரில் இயங்கிவரும் ஆசியாவிலேயே மிகப் பெரிய விவசாயப் பல்கலைக் கழகமும் புகழ்பெற்றவை.

ஹரியானா மக்கள் பலவிதமான பண்டிகைகளையும், திருவிழாக்களையும் கொண்டாடி வருகிறார்கள். அவற்றில் முக்கியமானவை ஹோலி, தீபாவளி, லோக்ரி, வசந்த் பஞ்சமி, தீஜ், தசரா ஆகியவை. மகர சங்கராந்திக்கு முந்தைய தினம் கொண்டாடப்படுவது லோக்ரி. புதிதாக திருமணம் ஆனவர்களுக்கும் பிறந்த குழந்தைகளுக்கும் லோக்ரி முக்கியமான பண்டிகை. வசந்த பஞ்சமியின்போது பட்டங்களைப் பறக்கவிட்டுக் கொண்டாடுவார்கள். மார்ச், ஏப்ரல் மாதங்களில் கொண்டாடப்படுவது காங்கோர். ஈஸ்வரன் மற்றும் கௌரி மாதா உருவங்களை ஊர்வலமாக



எடுத்துச் சென்று தண்ணீரில் கரைப்பார்கள்.

மழைகாலத்தை வரவேற்கும் பண்டிகை தீஜ். மழை காலத்தில் முதல் முறையாக மழைத் தூறல் விழுந்ததும், தீஜ் என்ற பூச்சி மண்ணுக்குள்ளிருந்து வெளியில் வரும். கிருஷ்ணர் பிறந்த நாளான ஜன்மாஷ்டமி வெகு விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது. இதற்கு அடுத்த தினம் கொண்டாடப்படுவது குக்காபிர். இந்துக்களும், முஸ்லிம்களும் இணைந்து கொண்டாடும் பண்டிகை இது. இவை தவிர ஆண்டுதோறும் மாம்பழத் திருவிழாவும், குருக்ஷேத்திரா திருவிழாவும் நடைபெறுகின்றன.

ஹரியானாவின் மிக முக்கியமான நடனம் சாங் ஆகும். பத்து அல்லது பன்னிரெண்டு பேர் பங்கேற்று ஆடக்கூடிய இந்த நடனம் ஐந்து மணி நேரம் வரை தொடர்ந்து நடக்கும், சில சமங்களில், ஆண்களே, பெண்கள் போல உடையணிந்து நடனம் ஆடுவதுண்டு. இவை தவிர, சாதி கோரியா, தமல், கூமர், ரசலீலா, ஜுமார், குக்கா, லூர் போன்றவை பிரபல பாரம்பரிய நடனங்களாகும்.

பிரம்பு மற்றும் மூங்கிலைப் பயன்படுத்தி பலவகையான பொருட்கள் செய்தல், எம்பிராய்டரி, உலோக வேலைப்பாடு செய்யப்பட்ட பொருட்கள், கலைவண்ணம் மிக்க பானைகள் போன்றவை ஹரியானாவின் கலைநயத்தை வெளிப்படுத்துபவை.



ஹரியானாவில் பார்க்க வேண்டிய சுற்றுலாத்தலங்கள் பல உண்டு. குருக்ஷேத்திராவில் மகாபாரதம் தொடர்புடைய கோவில் மற்றும் கிருஷ்ணா மியூசியம் போன்றவை உள்ளன. சூர்கானில், பாரம்பரியக் கலைகளுக்கான மியூசியம் ஒன்று இருக்கிறது. அம்பாலா நகரில் உள்ள பவானி அம்மன் ஆலயம், சீதளாதேவி கோவில், பிர்லா மந்திர், மானசா தேவி கோவில், மகாதேவ் கோவில், சீதா மயி மந்திர் போன்றவை ஹரியானாவின் முக்கிய கோவில்களாகும்.

ஹரியானா, பஞ்சாப் இரண்டு மாநிலங்களுக்குமே தலைநகரம் சண்டிகர்தான். மேலும், மிகவும் திட்டமிட்டு உருவாக்கப்பட்ட சண்டிகர் நகரமே, மத்திய அரசின் நேரடி ஆட்சிக்குட்பட்ட ஒரு பகுதி என்பதும் குறிப்பிடத்தக்கது. ஆக, சண்டிகர் என்பது ஒரு த்ரீ இன் ஒன் தலைநகரம்!



இந்தியாவின் மீது உலகத்தின் பார்வை மீண்டும் படிந்திருக்கிறது. சந்திரயான் என்ற செயற்கைக் கோளை நிலவுக்கு அனுப்பிய இந்தச் சாதனை இந்திய விண்வெளி ஆய்வின் இன்னொரு மைல் கல்.

இந்த செயற்கைக் கோள் சந்திரனில் தண்ணீர் இருக்கிறதா என்கிற ஆய்வை மேற்கொள்ளப் போகிறது. இந்த செயற்கைக் கோளில் இந்தியாவில் ஆறு கருவிகளும், வெளிநாட்டைச் சார்ந்த ஆறு கருவிகளும் இடம்பெற்றுள்ளன.

இவை நிலவின் தன்மையையும், பல்வேறு அம்சங்களையும் அனுப்பப் போகின்றன. இதன் அடிப்படையில் சந்திராயன் 2 என்ற விண்கலனை எதிர்காலத்தில் அனுப்பும் முனைப்பில் இருக்கின்றனர் விஞ்ஞானிகள்.

இவற்றைவிட, சந்திரனில் இருக்கும் ஹீலியம் 3 என்ற மூலப் பொருளை கொண்டு வரும் எண்ணத்தில் பல நாடுகள் இருக்கின்றன. நீர் மின்சாரம், அனல் மின்சாரம் அணு மின்சாரம் இவற்றைவிட, ஹீலியம் 3-ன் மூலம் தேவையான மின்சாரத்தை தயாரிக்க முடியும் என்கின்றனர் விஞ்ஞானிகள்.

1966-ல் சோவியத் யூனியனின் லூனார் 9 என்னும் விண்கலன் முதன் முதலில் சந்திரனில் தரை இறங்கியது. 1969-ல் அமெரிக்காவின் நீல் ஆம்ஸ்ட்ராங் மற்றும் ஆல்ட்ரின் நிலவில் கால் பதித்தார்கள். இவற்றைத் தொடர்ந்து பல நாடுகளும் நிலவுக்கு செயற்கைக் கோள்களை அனுப்பியுள்ளன; அடுத்த பத்தாண்டுகளில் மேலும் பல கோள்களை அனுப்பும் பணியிலும் ஈடுபட்டுள்ளன. இவை அனைத்துமே ஹீலியம் 3 கொண்டு வரும் நோக்கம்தான்.

இந்தப் பணியில், சந்திரயான் நிலவில் தரை இறங்கவில்லை. நிலவை நூறு கி.மீ. தொலைவில் சுற்றிவரப் போகிறது. அப்போது 'மூன் இம்பாக்ட் ப்ரஸ்' என்னும் சிறு கருவிதான் நிலவில் தரையிறங்கப் போகிறது. அந்தக் கருவியோடு சிறிய அளவிலான நம் தேசியக் கொடியும் நிலாவில் இறக்கப்படும். ஆக, நிலவிலும் நம் கொடி பறக்கிறது.

- ரமேஷ்



நிலவில் இந்தியக் கொடி!



இரண்டாம் பரிசு பெற்ற 'நான் நானாக..' சிறுகதையைப் படித்தேன். எம்.எஸ்.ஃபைஹல் அஹ்மத்துக்கு மனமார்ந்த பாராட்டுகள்!

- பா.விக்னேசுவரன், பா.தர்ஷினி, குட்டம்

'கோமு கேட்ட தொப்பி' படக்கதை படு ஜோர். செம விறுவிறுப்பு. அவரவர் செயலுக்கேற்ற விளைவு வரும் என்ற கருத்தை பந்தம் பிடித்தது போல் வெளிச்சமிட்டது.

- ஆர்.கே.கார்த்திக், மணவிளை

களரி பயில ஆசை!

கிராமியக் கலைகள் பகுதியில் 'களரி' என்ற சண்டைக் கலையைப் பற்றிப் படித்தபோது எனக்கும் அதைப் பழகிக்கொள்ள வேண்டும் என்ற ஆசை வந்துவிட்டது.

- பி.சர்வேஸ்வரன், உறுப்பினர் எண் : 456, மூன்றாம் வகுப்பு, ஜீவனா பள்ளி, மதுரை

சிறுவர்களை மட்டுமல்ல; பெரியோர்களையும் உண்மையாய் வாழ வழி வகுத்தது நேர்மை சிறுகதை!

- வீ.பெரியசாமி, தேளூர்

நடுப்பக்கத்தில் வெளிவந்த 'தெரியுமா?' செய்தி நன்றாக உள்ளது. கோகுலத்தை படிக்கும்பொழுது உலகிலுள்ள அனைத்து கோகுல நண்பர்களுடன் பழகியதுபோன்று உள்ளது.

- ஆ.பிரேம்குமார், உறுப்பினர் எண் : 422, ஏழாம் வகுப்பு, அரசு மேனிலைப் பள்ளி, மூஞ்சிறை

நான், நானாக... சிறுகதை படித்தேன். கடவுளால் பிறப்பிக்கப்பட்ட நாம் கொடுத்த வாய்ப்பை முறையாக பயன்படுத்தினால் வெற்றி பெறலாம் என்பதை உணர்த்தியது.

- எம்.சிவரஞ்சனி, உறுப்பினர் எண்.179, ஸ்ரீ மகாதேவ குரு மெட்ரிக்குலேசன் பள்ளி, வலங்கைமான்

'பொம்மைகளின் கதை' கவர் ஸ்டோரி பிஞ்சு நெஞ்சங்களில் ஒரு பவர் ஸ்டோரிதான்! கொசுறுச் செய்தியும்



கூடவே தந்து அசத்திவிட்டீர்கள்! அபாரம்!

- ஆர்.ஜி.ஏ.விஜய்சாயிபாலா, செல்வமருதூர்

நான் கோகுலம் வாசகன். கட்டுரைகள், கதைகள், கவிதைகள், படக்கதைகள் மிகவும் சுவையாக உள்ளன. ஓவியர் கலா மற்றும் பலரின் ஓவியங்கள் நன்றாக உள்ளன. நான் மாதந்தோறும் கோகுலத்தை தவறாமல் படிப்பேன்.

- கார்த்திக், திருநெல்வேலி

விடையைச் சொல்; பரிசை வெல் - 17

1. கோலாட்டத்தின் சமஸ்கிருதப் பெயர் ....

2. பைபாஸ் ஆபரேஷனை முதன்முதலில் செய்து காட்டியவர் ....

3. தமிழகத்தின் மிகப் பழைய அணைக்கட்டு..............................

4. கண்ணீர் மலையின் வேறு பெயர்..............................

5. சுருக்கெழுத்து முறையைக் கண்டறிந்தவர் ....

என் பெயர் : ....

வகுப்பு, பள்ளி : ....

: ....

வீட்டு முகவரி : ....

....

பின்கோடு ....



இங்கே ஐந்து கேள்விகள் கேட்கப்பட்டுள்ளன. விடைகளை நீங்கள் எங்கும் தேடிச் செல்ல வேண்டாம். இதே இதழில்தான் உள்ளன. அவற்றைக் கண்டுபிடித்து எழுதுங்கள். கூப்பனையும் பூர்த்திசெய்து இந்தப் பக்கத்தைக் கத்தரித்து அனுப்புங்கள். ஆசிரியர் தீர்ப்பே இறுதி.

பரிசு ரூபாய் 1000/-

முடிவு தேதி : 15.11.2008

அனுப்ப வேண்டிய முகவரி:

ஆசிரியர், கோகுலம், (பரிசுப் போட்டி)

47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 32

கோகுலம் சிறுவர் சங்கம்

உறுப்பினர்கள்


726


727


728


729


730


731


732


733


734


735


736


737


738


739


740


741


742


743



744


745


746


747


748


749


750

பெயர் மற்றும் விவரங்கள் 57 ஆம் பக்கம்

Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN/CC(S)DN/109/06-08 • Licensed to post without prepayment under PMG's Licence No. WPP TN/CC(S)DN/47/06-08 • Registered as a Newspaper in Srilanka

